# புதிய பாதை

ஆசிரியர்:-
இரா. நெடுஞ்செழியன் M.A

ஞாயிறு நூற்பதிப்பக வெளியீடு: 9

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI

# புதிய பாதை

12.1.77
16.9.78
3691

ஆசிரியர்,

இரா. நெடுஞ்செழியன், M. A.

1948 மார்ச். விலை அணா 12.

கிடைக்குமிடம் :

ஞாயிறு நூற் பதிப்பகம்
28, அம்பலத்தாடு ஐயர்மடத்து வீதி
புதுச்சேரி.

பாகனேரி.

சந்தானம் பிரிண்டிங் ஓர்க்ஸ்

புதுவை.

# முன்னுரை

3651

நான் அவ்வப்போது எழுதிய சில கட்டுரைகளை, ஞாயிறு நூற் பதிப்பகத்தார், அன்னை ஆதாரமாகக் கொண்டு தொகுத்து வெளியிட்டுள்ளனர். அவை, தொகுத்து வெளியிடக்கூடியனவாக இருக்கட்டும் என்று கருதி எழுதப்பட்டன அல்ல. எழுதிப் பழகும் பயிற்சிக்காக எழுதப்பட்டனவேயாகும்.

இந்தத் தொகுப்பிற்குப் 'புதியபாதை' என்று பெயரிட்டிருக்கிறார்கள். 'புதியபாதை' ஏதும் அறியாதார்க்குச் சிறு வழிகாட்டியாகவும், அறிந்தார்க்குத் தூண்டுகோலாகவும் விளங்கட்டும் என்று கருதி, ஞாயிறு நூற் பதிப்பகத்தாரின் முயற்சிக்கு மகிழ்ந்தேன். என்னை இந்தத் துறையில் ஊக்குவித்த பதிப்பகத்தார்க்கு, என் உளமார்ந்த நன்றி உரித்தாகுக!

1-3-48
சென்னை

இரா. நெடுஞ்செழியன்.

# பதிப்புரை

சீர்பெற்று வாழ்ந்த திராவிடம், இன்று அச் சீரி ழந்து சிதைந்து கிடக்கின்றது! உலகின் முன் தலை நிமிர்ந்து நின்ற திராவிட நாகரிகம், இன்று இருக்கு மிடம் தெரி யாமல் மறைந்து கிடக்கின்றது! எழில் வாய்ந்த திராவி டத்தின் இன்ப வாழ்வு, கனவு கண்ட கதைபோல் ஆகிவிட்டது!

இந்த மாறுதலுக்குக் காரணமென்ன? 'மக்கள் சிந் தனை யிழந்ததே' என்றாலும், அச் சிந்தனையை மக்கள் இழக்கும்படியான ஓர் நிர்ப்பந்தம்—கொடுங்கோன்மை, நாட்டில் தாண்டவமாடியது என்பதை யாரும் மறுத்து விடமுடியாது. அதனால்தான், நினைக்க முடியாத இந்தத் திடீர் மாறுதலுக்குத், திராவிடம் ஆளாகிவிட்டது!

எனினும், இன்றைய திராவிடநாட்டு அறிஞர் கடமை என்ன? திராவிடத்தின் கீர்த்தியில்—திராவிட நாகரிகத்தில், கவலையற்று இருக்கப் போகின்றனரா? இல்லையெனின், செய்யவேண்டிய கடமையாது?

> ''நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
> வாய்நாடி வாய்ப்பச் செயல்''

என்பது குறள். நோயாளியின் நோயை யறிந்து, அந் நோய் உண்டானதற்குக் காரணத்தையு மறிந்து, அதற் கேற்ப மருந்து கொடுத்தால்தான் நோய் குணமாகும்.

அதுபோன்றே, திராவிடத்தின் இன்றைய சீர்கேட்டை யறிந்து, இச் சீர்கேட்டிற்குக் காரணமாக இருந்தவை — இருப்பவைகளையுமறிந்து, அவற்றைப் போக்க அறிவுத் துணை கொண்டு முயற்சித்தால்தான், திராவிடம் திராவிடமாக விளங்க முடியும்! திராவிட நாகரிகமும் உலகின்முன் தலை சிறந்து ஓங்க முடியும்!

இச் சிறு நூல், திராவிடத்தின் மேம்பாட்டிற்கு — நன்னிலைக்குப், பல துறைகளில் வழி வகுத்துத் தருவதே யாகும். இதனை எழுதியவர், அறிஞர், இரா. நெடுஞ் செழியன் M. A. அவர்களாவர்.

தோழர் நெடுஞ்செழியன் அவர்களைத். தமிழகத் திற்கு அறிமுகப்படுத்த வேண்டிய அவசியமில்லை. அவர், பகுத்தறிவு மாணவ உலகில் தலை சிறந்து விளங்கிய அந் தக் காலையே, தமிழ் நாட்டுக்கு நன்கு அறிமுகமாகி விட்டவர். இன்று, அறிஞர் குழுவில் ஒருவராக அமர்ந் திருப்பவர். அவர், நாம் எந்தெந்தத் துறையில் முன்னேறிச் செல்லவேண்டும் என்பதற்கு, அவர் "புதிய பாதை" அமைத்துத் தருகிறார். திராவிட நலனில் ஆர்வங் கொண்டுள்ள தோழர்கள், இப் புதிய பாதையை யறிந்து, ஆவன செய்ய முயல வேண்டுகிறோம்.

4–3–48.
புதுவை.

இங்ஙனம்,
ஞாயிறு நூற்பதிப்பகத்தார்.

# பொருளடக்கம்


| பொருள் | பக்க எண் |
|---|---|
| 1. தமிழ் | 7 |
| 2. இலக்கியம் | 13 |
| 3. அறிவியல் வளர்ச்சி | 24 |
| 4. வரலாறு | 31 |
| 5. சமுதாயம் | 40 |
| 6. பொருளாதாரம் | 48 |
| 7. நமது குறிக்கோள் | 54 |

# புதிய பாதை.

3651

## 1. தமிழ்

'உயர்தனிச் செம்மொழி என்று போற்றப்படுவது! இலக்கண இலக்கியச் செறிவுடையது! பழம் பெருங் காலந்தொட்டு எழில் குன்றாது இயங்கி வருவது! உள்ளக் கருத்தை ஒலிக்குறிப்பினால் உணர்த்தத்தொடங்கிய கால முதல், இயற்கையோடு இயைந்து வளர்ந்து வருவது! கழகமிருந்து போற்றிக் காப்பாற்றப்பட்டு வளர்க்கப் பட்டுவந்தது! இதனுடன் தோன்றியஏனையவை, வழக்காறு ஒழிந்து காணப்படவும், இது ஒன்றுமட்டுமே இது காறும் உயிருடன் நின்று நிலவும் பெற்றியமைந்தது' என்று இவ்வாறாகப் போற்றிப் புகழப்படும் நம் தாய் மொழியாம் தமிழின் இற்றைக்கால நிலையை, உய்த்துணர வேண்டியது இன்றியமையாததாகின்றது.

ஒருகாலத்தில் வளர்ந்து செழித்திருந்த தமிழ், பல்வேறு ஏதுக்களால் தாக்குண்டு, செழுமை குன்றி, வளர்ச்சியற்ற நிலையை எய்தியது என்பதை, வரலாறு நமக்கு உணர்த்தியுள்ளது. தடைப்பட்டுத் தேங்கிய நிலையை எய்திய தமிழ், இன்றும் அதே நிலையில்தான் இருக்கிறது; வளரவில்லை என்பதைத், தமிழ்ப்புலவர்கள் சிறிது பொழுதாயினும் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும்.

பல்வேறு துறைப்பட்ட உலகியல் அறிவு பரந்தோங்கிப் பார்முழுதும் ஆட்சி செய்து கொண்டிருக்கும் இக்காலத்தில்,மக்கள் தம் உள்ளத்தில் ஊறி எழும் கருத்துக்களை நீரருவியின் வீழ்ச்சிபோல் வெளியில் கொட்டுவதற்கு எற்ற வண்ணம்,தமிழ் மொழி வளம் பெறவில்லை; வளரவில்லை; வளர வழியமைக்கப்படவில்லை. எடுத்துக்காட்டாக ஆங்கிலமொழியை எடுத்துக் கொண்டால், அது சொற்செறிவுடையதாய், எண்ணிய கருத்துக்களை எழிலுடைச் சொற்களாலே விளக்கிக்காட்டும் அளவுக்கு வளம் பெற்றிருக்கிறது. தமிழ் தோன்றிய காலத்திற்குப் பிறகு பல்லாயிரம் ஆண்டு கழிய, பின்தோன்றிய ஆங்கிலம் வளர்ச்சியுற்று விளங்கவும், தமிழ் ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் வளர்ந்த ஒரு நிலையிலேயே நிற்கவுமான எது என்ன? ஆங்கில இலக்கியப் புலவர்கள், அம் மொழியினை வளர்க்கச் சென்ற சில நூற்றாண்டுகளாக எடுத்துக்கொண்டபெருமுயற்சி,அந்தவெற்றியினை அதற்குக் கொடுத்தது. ஆங்கில இலக்கியப் பெருமக்கள்,புதிய புதிய கருத்துக்களை விளக்கப் புதிய புதிய சொற்களைச் சேர்த்து வளர்த்துக் கொண்டே வந்தனர். ஆங்கிலம் இயற்கையோடு இயைந்து வளர்ந்து வராத மொழியாய் இருந்தமையின், அதனிடத்து வேர்ச்சொற்கள் இல்லை. புத்தம் புதியகருத்துக்களை விளக்கச்சொற்கள் அகப்படாதபொழுது,வேற்று மொழிச் சொற்களையாவது எடுத்து ஆளவேண்டிய இன்றியமையாத நிலையில் ஆங்கில இலக்கியப் பெருமக்கள் இருந்தனர். அவர்கள், தம் தாய் மொழியைவளர்த்தனர்; ஆகவே,அது வளர்ந்தது. தமிழ்ப் பெருமக்கள் தமிழை வளர்க்க வில்லை. ஆனால், ஆங்கிலர் தம் தாய்மொழியைக் காப்பாற்றி வந்தார்கள், ஆகவே,

அதுவளர்ச்சியுற்று இருக்கிறது. தமிழ் வளரவில்லை; இருக்கிறது.

ஆங்கிலத்தைப் போலத் தமிழ், வேர்ச்சொற்கள் பஞ்சமுடையதல்ல. இருந்தும், ஆங்கிலம் வளர்ந்தது; தமிழ்தாழ்ந்தது! இடையில் பல நூற்றாண்டுகளாகத் தடையேற்படாமல் இருந்திருந்தால், புத்தம் புதிய கருத்துக்களைத் தெளிவுபடுத்தத் தமிழ் பயன்பட்டிருக்கும். ஆங்கிலத்தைப் போல் பிறமொழிச் சொற்களைக் கடன்வாங்கவேண்டிய நிலையிலில்லாமல், தமிழில் வேர்ச்சொற்களைக்கொண்டே புத்தம்புதிய சொற்களை உண்டாக்கிக் கொள்ள முடியும். எடுத்துக்காட்டாக, 'சைகிள்' என்ற ஆங்கிலப் பெயருடைய பொருள் தமிழ் நிலத்தில் வந்திறங்கும்போது, அதனைச் சுட்டிக் காட்டுவதற்குரிய தமிழ்ச்சொல் இல்லாமலிருப்பது இயற்கையே. அதன் வடிவு, பண்பு, இயக்கம் முதலியன கண்டறிந்து அதற்கேற்பத் தமிழ்ப்பெயர் கொடுக்க இயலுமா என்று பார்க்கவேண்டும். அப்படிப் பார்க்கும்போது. 'ஒற்றைச் சுவட்டுவண்டி' அல்லது, 'ஈருருளி வண்டி'என்றகாரணப் பெயரை அதற்குச் சூட்டுவது பொருந்துவதாகும். இந்த முறையில்,பெரும்பாலான புதியபொருள்களுக்குப் புதிய சொற்களை உண்டாக்க வேண்டும். இந்தவேலையைப் புலவர் குழாம் செய்யமுடியும்; செய்யவேண்டும். பொருள்களுக்கும்,கருத்துக்களுக்கும் புதியசொற்களைத் தமிழிலேயே கண்டுபிடிக்க இயலாதவிடத்துக், தமிழ் ஒலிக்குறிப்புக்கேற்ப அவைகளைத் திருத்திக்கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, Peucilineஎன்றஆங்கிலப் பெயரமைந்த புதியமருந்து ஒன்று, இப்பொழுது வந்

திருக்கிறது. அதற்கேற்ற தமிழ்ப் பெயரைத் தமிழி லிருந்தே எடுத்தமைத்துக் கொள்வதென்பது எளிமை யுடையதல்ல. இத்தகையநிலையில் 'பென்சிலின்' என்று தமிழில் கொள்வது தவருகாது.

பெரு வழக்குடைய பிறமொழிச் சொற்களுக்கே, ப தமிழில் சொற்கள் இருக்குமேயாயின், அவற்றைப் பெருவழக்குடைய சொற்களாக ஆக்கும் பெரும்பணியை இலக்கிய அறிஞர்கள், மேற்கொள்ள வேண்டும். எடுத் துக்காட்டாகச் சாதம், ஜலம், சந்தோஷம், க்ஷேமம் போன்ற சொற்களுக்கு மாருக, சோறு, நீர், மகிழ்ச்சி நலம் போன்ற சொற்களை எடுத்தாளச் சிறிது முயற்சி எடுத்துக் கொள்ளப்படுமேயாளுல், நாளடைவில்மொழி வளர்ச்சியடைய ஏதுவாகும். இயலாத விடத்துத் தமிழ் ஒலிக்குறிப்பிற்கேற்பப் பிறமொழிச் சொற்களைத்திருத் தியாவது தமிழின் சொல் வளத்தைப் பெருக்கும் துறை யில், மற்றவரைக் காட்டிலும் தமிழ்ப் புலவர்கள் இறங்க வேண்டியவர்களாகிருர்கள்.

புதுக் கருத்துக்களைத் தெளிவாக்கும் சொற்களைத் தமிழிலேயோ, இயலாதவிடத்துத் தமிழோடுசார்ந்தநிலைப் படுத்தியோ தமிழின் சொல்வளத்தைப் பெருக்க, தமிழ்ப் புலவர்கள் முதற்கண் முன்வரவேண்டும். அரசியலார் உதவி, அறிஞர் உதவி, மக்கள் உதவி இந்தத் துறையில் நாளடைவில் பெருகும் வண்ணம், நிலைமை வந்து கொண் டிருக்கிறது. தமிழறிஞர்கள் ஒன்றுகூடவேண்டும். ஒன்று கூடிப் பேரறிஞர்களைக் கொண்ட குழுக்கள் அமைத்து, ஆவன செய்ய முற்படவேண்டும். ஏனைய நாடுகளின்

இலக்கியப் பேரறிஞர்கள் இதனைச் செய்கிறார்கள். ஏன் இங்குச் செய்யலாகாது?

பழைமைக்கு வளைந்தும், நெளிந்தும், படிந்தும் வாழ்கிறவர்களைத் தவிர்த்துப், புத்துலகம் அமைக்க உணர்ச்சி பெற்று எழுச்சியுற்று விளங்கும் இளம்புலவர்கள் — தமிழ் ஆர்வம் பொங்கி எழும் இளைஞர்கள் — தமிழை வளர்க்க, புத்தம் புதிய கருத்துக்களை வளர்க்க, புதிய பாதையை அமைக்க, ஒன்று கூடித்தீரவேண்டும்.

கல்வி அமைச்சர் அவனாசிலிங்கனார், பல் பொருள அகராதி ஒன்று தமிழில்காண, ஒரு நூறாயிரத்திற்குமேல் நிதி சேர்த்துள்ளனர். இந்த முயற்சி போற்றத்தக்கது; வரவேற்கத்தக்கது. ஆனால், தமிழறிஞர் என்றுசொல்லிக் கொண்டு தமிழுக்குப் பகைவராய் விளங்குவோரைக் கொண்டு, அந்த அகராதியைச் செப்பனிட அமைச்சர் முயல மாட்டார் என்பது எமது துணிபு. ஆகவே, இந்த வேலையைச் செவ்வனே செய்து முடிக்கும் முயற்சியை எடுத்துக்கொள்ளத், தமிழ்ப்பேரறிஞர்கள் முந்துறவேண்டும்.

'எல்லார்க்கும் எல்லாம்' என்றிருப்பதான புத்துலகம் நோக்கித் தமிழகத்தை இழுத்துச் செல்ல, ஏனையோரைக் காட்டிலும் புலவர்கள் பாடுபடவேண்டும். பழைமைக் கருத்தை மாற்றித், தேவையான புதுமைக் கருத்துக்களைச் செந்தமிழ்த் தேனில் குழைத்து, இலக்கிய வட்டிலின்மூலமாக மக்களுக்கு ஊட்டவேண்டும். பாரதியாரும், அவரைவிடச் சிறப்புடைய முறையில் பாரதிதாசனும் வழிகாட்டிகளாக அமைந்துள்ளனர்.

இலக்கியத்தின் போக்கை மாற்ற, இலக்கியத்தை வளர்க்க இலக்கியத்தைப் புதுப்பிக்க இளம்புலவர்களே, முன்வாருங்கள்! நாடு உங்களை எதிர்பார்த்து நிற்கிறது! இளைஞர்களால்தான் செயலாற்று வழியை மாற்றவோ, வளர்க்கவோ முடியும். அவர்கள் மாற்றியிருக்கிறார்கள். எனவே, இளம்புலவர்களும் அவர்களுக்குரிய கடமையைச்செய்தால், தமிழகம் புதிய பாதையில் விரைந்து செல்லும் என்பது திண்ணம்!

வங்கம், தன் தாய்மொழியான வங்காளிமொழியை அரசியல் மொழியாக ஏற்றுக்கொண்டுவிட்டது. அசாமும் ஐக்கிய மாகாணமும், தங்கள்மொழிகளையே அரசியல் மொழிகளாக ஆக்கிக்கொண்டுவிட்டன. எனவே தமிழகமும், தன் தாய்மொழியாம் தமிழை அரசியல் மொழியாகக்கொள்ள வேண்டும். அந்தமுயற்சி, அண்மையில்வெற்றி பெறும்; வெற்றிபெற்றே தீரும். தமிழகப் பாராளும் மன்றத்திலிருந்து சிற்றூர் மன்றம்வரையிலும், தமிழே சொல்லாடலாக அமையும். நீதிமன்றங்கள், அலுவலகங்கள், பணிமனைகள், வாணிகக் களங்கள், பல்கலைக்கழகங்கள், அங்காடிகள் ஆகிய எங்கணும், தமிழே முதன் மொழியாக ஒலிக்கப்பெறும். அவற்றிற்கெல்லாம் உரிய வாறு, தமிழைத் திறனுடையதாகச் செய்யவேண்டிய பொறுப்புப், புலவர்களைச் சார்ந்ததாகும். ஆகவே, கடமையைச்செய்ய இளம்புலவர்கள் புறப்படுவார்களாக!

## 2. இலக்கியம்

மனிதனது அறிவினல் தொடப்பட்டு, நுண்மைப் பாடு பொதிந்து வளர்கின்றபொருள்கள் சார்ந்திருக்கும் துறைகள் எவைஎவையோ, அவையெல்லாம் கலைகள் எனக் கற்ருேரால் கருதப்படுகின்றன. எடுத்துக் காட்டாகச் சிற்பம், ஓவியம், இயல், இசை, கூத்து ஆகிய துறைகள் கலைகளெனக் கூறப்படுகின்றன. இவையெல்லாம், மனிதனது நுண்ணிய அறிவு தொடத் தொட,மேலும் மேலும் வளர்ச்சியடைகின்றன. மனிதன், காட்டுமிராண்டிக் காலத்திய நிலையிலிருந்து நாகரிகமுடைய நல்ல நிலைக்கு நகர்ந்திருக்கிருன் என்பதைக், கலைவளர்ச்சியின்வரலாறு வலியுறுத்த அறிகிருேம்.எங்கணும் எழிலைக் காணவேண்டும், கண்டு இன்பமெய்தவேண்டும் என்ற அவாவினல் உந்தப்படும்அறிவின்விளைவே,பெரும்பாலும் கலையாகக் காட்சியளிக்கிறது. நீலவான் வெளியிலே நின்றிலங்கும் நீலமலையினின்றிழிந்து, பசும் புற்றரையில்படர்ந்து செல்லும் வெள்ளிய அருவியின் இயற்கைக் காட்சியை நம்முன் காட்டவிரும்பும் ஓவியக்காரன்,அதன் பார்வைத் தோற்றத்தைப் படமாகத் தர முயலுகிருன். இயற்கைக்கும் தான் எழுதும் செயற்கைக்கும், பார்வைத் தோற்றமளவிலே ஒற்றுமைகாண, அறிவின் திறனைச் செலவழிக்கின்ருன். விளைவு, ஓவியம் எனப்பெயர் பெறுகிறது. இயற்கைக்கும், எழுதப்பட்ட ஓவியத்திற்கும் எவ்வளவுக் கெவ்வளவு ஒருமைப்பாடு இருக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு அருங்கலை எனப் புகழப்படுகிறது. சேரன் செங்குட்டுவன் போன்ற சிற்பம் என்ருல், சேரன் செங்குட்டுவனுக்கும் அந்தச் சிற்

பத்திற்கும் உருவிலே ஒருமைப்பாடு இருக்கிறது என்பது பொருள். அந்த ஒருமைப்பாட்டின் திறமைக்கேற்ப, அது அருங்கலைச் சிற்பம் என்று போற்றப்படுகின்றது. அதுபோல, மக்களுடைய மனநிலையைப் படம் பிடித்து, எழுத்தோவியத்தில் தீட்டிக்காட்ட விரும்புகிறான் இயற்புலவன். ஓவியக்காரனும் சிற்பியும், தம் அறிவின் திறத்தால் தத்தம் கலைகளை அழகுபடுத்திக் காண்பிக்குமாறு போல, இயற்புலவனும், மக்கள் மனதில் எழும் ஒவ்வொன்றையும் அழகுபடுத்திக் காண்பிக்க விரும்புகிறான். ஆகவேதான், இலக்கியம் அல்லது இயற்கலை, அருங்கலைகளுள் ஒன்றாகச் சொல்லப்படுகின்றது.

மற்றக் கலைகளெல்லாம் வியப்பின்பம் ஒன்றையே நல்க, இலக்கியம் பெறற்கரிய இன்பத்தைப் பயப்பதோடு செயற்கரிய பல செயல்களையும் செய்யவல்லதாகிறது. எண்ணங்களை ஊறி எழச்செய்யும் உள்ளத்தை உருவாக்கி வருவது, இலக்கியந்தான்! மற்றக் கலைகளெல்லாம் வளரச் செய்வதற்குக் காரணமாக இருக்கும் அறிவையே அழகுபடுத்திக் காட்டும் ஆற்றல் படைத்தது, இலக்கியம! இலக்கியம் எந்த வழியில் மக்களின் மனநிலையை மாண்புபடுத்துகிறதோ, அந்த வழியில் மக்கள் செல்லுகிறார்கள். இதைத்தான், நாகரிகம் படைத்த நாடுகளில் காண்கிறோம். படியாத பாமர மக்கள் படித்தவர்களைப் பொறுத்தும், படித்தவர்கள் தாம் கற்ற கல்வியறிவைப் பொறுத்தும், கல்வியறிவு அது புகட்டப்படுகின்ற இலக்கியத்தைப் பொறுத்தும், இலக்கியம் அது எழுவதற்குக் காரணமாக இருக்கும் மொழியைப் பொறுத்தும் இலங்க வேண்டியிருக்கிறது என்பது புலப்படுகின்

றது. மக்களின் மனநிலையை மாற்றுவதன்மூலம் உலகத்தின் போக்கையேமாற்றும் இலக்கியங்களைத் தம் எழுதுகோலின் முனையிலே எழுப்பிய வீரர்களைப் போற்றிப் புகழும் அளவுக்கு, உலகம் வேறு யாரையும் போற்றிப் புகழ்ந்தது கிடையாது. மற்றக்கலைகள், இன்பம் ஒன்றைத் தான் பயக்கும்; அதுவும் அக்கலைகளோடு தொடர்பு கொண்டிருக்கும் அளவுக்குத்தான். ஆனால் இலக்கியக்கலை, கற்குந்தோறும் இன்பம் பயக்கும்! மக்களின் மனநிலையை மாற்றும்! வீரர்களை உண்டாக்கும்! மாற்றாரை மண்டியிடச் செய்யும்! ஒடிந்து கிடக்கும் உள்ளங்களைத் தட்டி எழுப்பும்! எஃகு உள்ளமாக ஆக்கும்! மமதையாளரின் மௌடீகக் கோட்டையைத் தகர்க்கும்! அரியணைகளை ஆட்டி வைக்கும்! பெரியவர்களைச் சிறியவர்களாக்கும். சிறியவரைப் பெரியவராக்கும்! அதே சமயத்தில், மக்களுக்கு மடமையும் ஆக்கும்! உலுத்தர்களுக்கு உயர்வு கொடுக்கவும் செய்யும்! மக்களைக் கோழைகளாகவும் ஆக்கும்! குனிந்து நடக்கவும் செய்யும்! நல்லதும் பயக்கும், தீயதும் பயக்கும். ஆகவே இலக்கியம், நெருப்பைப் போல நன்மைக்கும் பயன்படும், தீமைக்கும் பயன்படும். பயன், அதனைக் கையாளுகின்றவரைப் பொறுத்திருக்கிறது. உலக ஏடுகளைப் புரட்டிப் பார்க்கும்போது, பகுத்தறிவென்னும் உலைக்கூடத்தில் வார்க்கப்பட்ட இலக்கியங்கள்தான், ஈடும் எடுப்புமற்று எதுவரினும் அஞ்சாது, இறுமாந்து செம்மாந்து நிற்கக் காண்கிறோம். முழுவதும் பகுத்தறிவு உலைக்கூடத்தில் வார்க்கப்படாத அந்த இலக்கியங்களில்கூட, எவ்வெப் பகுதி அந்த உலைக்

கூடத்திலே தட்டி எடுக்கப்பட்டிருக்கின்றனவோ, அவ்வப் பகுதிகள் என்றும் சிறந்து விளங்கத்தான் செய்யும்.

நாம் தமிழ் இலக்கியப் பூஞ்சோலையில்தான், பெரும்பாலும் ஓய்வு நேரங்களில் உலாவுகிறோம். கண் கவரும் ரோசாவும், மணம் வீசும் மல்லிகையும், சிரிக்கும் முல்லையும் செறிந்து காணப்படும் சிலசெடிகளை, அங்குக்காண்கிறோம். அச்செடிகளிலுள்ள மலர்களைப்பறித்து, இன்பம் நுகர எண்ணுகிறோம். ஆனால், அவற்றைப் பறிப்பதற்கில்லாமல், கள்ளியும் கற்றாழையும் வழியடைத்து இடைமறித்திருக்கக்கண்டு, திகைக்கிறோம், அக்கள்ளிக்கும் கற்றாழைக்கும்நீர் ஊற்றி வளர்த்து, முல்லைச்செடிக்குச் செல்லும் வழியை அடைத்து, கள்ளியின் மினுமினுப்பைப் பார்! அதன்முள்ளின் கூர்மையைநோக்கு! கற்றாழையின் நறுமணத்தை நுகர்! என்று இலக்கியப் பூஞ்சோலையின் காவற்காரர்கள் என்று தங்களைக் கருதிக்கொண்டிருக்கும் பழைய பண்டிதர்கள் கூறக் காண்கிறோம். தோழர், C. N. அண்ணாத்துரை – அவர்கள் கூறுவதுபோல, விழுமிய தமிழ் இலக்கியங்களின் அருகே மக்களை நெருங்கவொட்டாமல் இதுவரையில் செய்து வந்தவர்கள், மதச் சேற்றில் புரளும் பண்டிதர்களேயாவார்கள், வாழ்ந்த திராவிடம் வீழ்ச்சியுற்றதற்குக் காரணம், கயமையும் மடமையும் பொதிந்த நூல்களைக் கலைகள் என்று கூறி, மக்களை இருண்ட உலகத்திற்குக் கலைவாணர்கள் அழைத்துச் சென்றதேயாகும்! இந்தநாட்டுப் பண்டிதர்களின் இரங்கத்தக்க இழிநிலைக்குக் காரணம், அவர்களது படிப்பே ஒழிய வேறில்லை என்று, தோழர் கைவல்யம் அடிக்கடி கூறுவார்கள். மற்ற நாட்டுப் புலவர்கள், தங்கள் நாட்டில்

தோன்றி வளர்ந்த வீரர்களின் வெற்றிகள் விளம்பப் படும் இலக்கியங்களைத் தம் மக்களிடத்தே தந்தார்கள். அவற்றைக் காணும் அவர்கள் உள்ளம், உணர்ச்சியால் ஓரளவுக்கு முறுக்கேறிற்று, முறுக்கேறுகின்றது. இந்த நாட்டில்,வெங்களம் நின்று தகடூரெறிந்த பெருஞ்சேரலி ரும்பொறையைப் பற்றிய பாடல்களை, ஆரியப்படை கடந்த வேந்தர்களைப் பற்றிய வெற்றிமாலைகளை, மக்களி டத்தில் தருவதில்லை. ஆனால், குடியேறிய வஞ்சகர்க ளின் கொற்றத்தைப்பற்றிப் பரணிபாடுகிறார்கள் பண்டி தர்கள்.நாடோடிகளாக வந்தவர்களைக் கடவுளாக்கினார்கள்! காதைகளும் பாடினார்கள்! எப்படி இந்த நாட்டில் வீரம் இருக்கமுடியும்? கயமைப் புராணங்களை எண்ணுகின்ற உள்ளம், எங்ஙனம் தன் கடமையைப்பற்றி நினைக்கும்? நினைப்பதற்கு நேரம் ஏது? அல்லும் பகலும் அநவரத மும், "**ஆதலாலிப் பிறவி வேண்டேன் அரங்கமா நகரு ளானே**" என்று கூறத்தானே,கலாரசிகர்கள் கொடுக்கும் இலக்கியங்கள் மக்களுக்குக் கற்றுக்கொடுத்தன.

புறநானூற்றைக் கண்டோம், அதைப்பெரிய புரா ணத்தால் பண்டிதர்கள் மறைத்திருப்பதையும் கண் டோம். கரிகால் வளவனையும், அவன் அரசிருக்கையாகிய பூம்புகாரையும் புகழ்ந்து கூறும் பட்டினப் பாலையைக் கண்டோம்; அது கம்பராமாயணத்தால் மறக்கப்பட்டு மறைக்கப்பட்டிருப்பதையும் கண்டோம். அகநானூறு, ஐங்குறுநூற்றைக் கண்டோம்; அவை இருந்த இடத் தில், அழகரந்தாதிகள் இருக்கக் கண்டோம். போற்றப் படவேண்டிய இலக்கியங்கள் போற்றப்படவில்லை. இழிவு

படுத்தும் நூல்கள் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றன. அழகும் எழிலும், அறிவும் திறனும், வளமும் வாணிக மும், ஆட்சியும் மாட்சியும், இன்பமும் துன்பமுமாகக் கொடுக்கப்பட வேண்டிய இலக்கியக் கருத்துக்கள் மாறி, கடவுளும் சமயமுமாகக் காட்டப்படுகின்றன. இதனைக் கண்ட புரட்சிக் கவிஞர் பாரதிதாசனவர்கள் வெகுண்டு,

“மாடுகளும் வழக்கத்தால் செக்கைச் சுற்றும்
மடையர்களும் இயற்றிடுவார் கடவுட் பாடல்!

என்று கூறியுள்ளார். நாட்டின் நிலையை நல்ல முறையில் உணர்ந்ததால் உள்ளம் குமுற,குமுறிய உள்ளத்துடனே கொதித்தெழுந்த சுயமரியாதைக்காரன்,தீப்பந்தமும் கூர் வாளும் ஏந்திய கைகளுடன் தமிழ்ப் பூங்காவில் உலவத் தொடங்கியுள்ளான். கள்ளியையும், கற்றாழையையும் முட்புதரையும், நச்சுச்செடிகளையும் வெட்டி வீழ்த்தி, வீழ்த்தப்பட்டவைகளின்மேல தீவைக்கக் கிளம்பியுள்ளான். இலக்கியத்தை, நறுமணம் கமழுகின்ற பூஞ்சோலையாக ஆக்க நினைக்கும் சுயமரியாதைக்காரன், முதலில் அழிவு வேலை செய்ய வாளும், பந்தமுமாக வலம்வருகின்றான். இலக்கியப் பூஞ்சோலையின் காவற்காரர்கள் என்று சொல் லிய பண்டிதர்களிடம், பன்முறை சொல்லிப்பார்த்தான் கள்ளியையும் கற்றாழையையும் அகற்று என்று. கேட்க வில்லை. சுயமரியாதைக்காரன் இன்று தன் கடமையைச் செய்ய முனைந்துள்ளான்.இப்பொழுதுஇடைமறிக்க அவர் கள் கைகள் வருமாயின், வீசும்வாள் அவற்றின் மீது வீழ்ந்தேதீரும். துண்டாக்கப்பட்டவைகளை மீண்டும் ஒட் டிக்கொள்ளவும் முடியாது. காரணம், கள்ளிகளோடு சேர்ந்து கைகளும் வெந்துபோகும். கலாரசிகர்களைக்

குற்றம் சொல்லவேண்டுமென்பது நமது கொள்கை அல்ல. காரணமில்லாமல் குற்றம் கூறவில்லை. பகுத்தறிவுப் பாதையிலே சென்றுகொண்டிருக்கும்போது சுயமரியாதைக்காரனோடு கூடவர இயலவில்லை என்றால், குறுக்கே நில்லாமல் ஒதுங்கி நின்றுகொள்ளட்டும். ஒதுங்கி நில்லுங்கள் என்று கேட்டுக்கொள்வதற்குக் காரணம், அச்சமல்ல; அவர்களும் நம்இனம் என்ற உணர்வு.

> "வெட்டாத கத்தியினை வீசாக் கையர்ல்
> வேடுக்கென்று தூக்கிநமை வீழ்த்தப் பார்க்கும்
> முட்டாள்கள்......"

என்று சற்றுக் கடுமையாகப் புரட்சிக் கவிஞரால் கூறப்படுகிற அவர்கள், சிறிது சிந்தித்துத் தெளிவு பெறட்டும்.

நாம் ஏன் தமிழிலக்கியங்களில் ஒரு பகுதியை வெறுக்கிறோம்? கலையையுணரும் செவியுணர்வும், நுண்மாண் நுழைபுலமும், எஃகுச்செவியும் அவர்களுக்கிருப்பது போல நமக்கில்லையா? இல்லை என்றுசொல்ல அக்கலைவாணர்களே அஞ்சுவார்களே. சொற்செறிவும், பொருளாழமும், உவமை நயமும், அணி அழகும் அவர்களுக்குப் புலப்படுவது போல, நமக்குப் புலப்பட வழியில்லையா? அதுவும் கூறமுடியாதே. நம்மிற்பல புலவர்கள் இருக்கிறார்கள் என்பதை அவர்களே உணர்கிறார்களே! நமக்குக் கவிபாடத் தெரியாதா? அதோ, பாரதிதாசனின் ஏறு நடை கண்டு பதுங்குகின்றவர்களைக் காண்கிறோமே! சொல்லாற்றல் இருக்க வழி இல்லையா? தோழர் தளபதி அண்ணாதுரையோடு போட்டியிட முடியாமல், சேதுப்பிள்ளையும் பாரதியாரும் ஓடினதை அன்று கண்

டோமே! வீரஉரை பகர முடியாதா? அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமியின் சொற்பொழிவு என்றவுடனே, கைகளும் தோள்களும் துடிக்கின்றனவே! சிந்தனைச் சிற்பி கிடையாதா? சிந்தனைச் சிற்பி சிங்காரவேலரின் முன்னால், குருட்டு நம்பிக்கைகளும், மூடப்பழக்க வழக்கங்களும் பொடியாவதைக்கண்டோமே! கட்டுரைஎழுதும் வன்மை காணப் படவில்லையா? கைவல்யத்தின் கட்டுரைக்கு! கல்யாண சுந்தரங்கள் அன்று கலங்கிய கலக்கத்தினால், இன்றும் விடை கூற வாய் திறந்த பாடில்லையே! புத்தம் புதியகருத்துக்களை அள்ளி அள்ளிவீசி, மணிக்கணக்கிலேமழையாகப் பொழியும் அறிவுக் களஞ்சியம் இல்லையா? அதோ, தாடியோடு மாற்றார் நடுங்கச் சிங்கமென நிற்கிறாரே பெரியார்! எனவே, நமக்கு அழகைப் பார்க்கும் ஆர்வமும், இன்பம் பெறும் நோக்கமும், கவிதையிடம் காதலும் இல்லை என்று கூறமுடியாது. இருந்தும், ஏன் கம்பராமாயணத்தைக் கொளுத்த வேண்டுமென்கிறோம்? இயற்கையின் எழிலை, நாட்டின் சிறப்பை, வீரத்தின் மேம்பாட்டை, வள்ளற்றன்மையின் பெருமையை, மக்களின் பண்பை, நீதியின் நேர்மையை இழிவு பயக்கும் கட்டத்திலில்லாமல் இனவுணர்ச்சியோடு அமைக்கப்பெற்ற பாடல்களாக இருக்குமாயின், அவற்றை என்றும்நாம் வரவேற்கிறோம். தோழர் தளபதி அண்ணாத்துரை கூறுவதுபோல, நல்ல பகுதிகளை எடுத்துக்கொண்டு, ஆபாச—இழிந்த—மாற்றாரை உயர்வு படுத்தியுள்ள பகுதிகளை, எங்களிடம் வீசி எறியுங்கள்; ஏற்றிய தீப்பந்தத்தை அதில் வைக்கிறோம் என்றுதான் நாம் கூறுகிறோம். மக்களை ஆரிய அடிவருடிகளாக ஆக்கியவை, கம்பராமாயண பஜனைக் கூடங்கள்

என்பதை நாங்கள் அறிகிறோம். ஆகவே, அதற்குத் தீ வைக்கிறோம். கம்பராமாயணத்திலுள்ள நச்சுக் கொடிகளை வெட்டி நல்லதொரு தண்டாக அதனைக்கொடுத்தால், தமிழ்இலக்கியப்பூஞ்சோலையில் இருக்கும் முல்லைக்கொடிக்குக் கொழு கொம்பாக ஊன்றுகிறோம். கம்பராமாயணத்தை நாம் வெறுப்பது எக்கருத்திலே என்பதை, ஓர் எடுத்துக்காட்டின் மூலம் விளக்க விரும்புகிறோம். ஆங்கிலநாடகநூலாசிரியரான ஷேக்ஸ்பியரின் ஜூலியஸ் ஸீசர் (Juluis Cœsar) என்றநூலில் ஒருகட்டத்தில்வருகிறது. ஜூலியஸ் ஸீசர் என்ற ரோமாபுரி மன்னனைப், புரூடஸ் (Brutus) என்பானும் அவனைச்சேர்ந்தோரும் ஆட்சி மன்றத்திலே குத்திக் கீழே வீழ்த்தினர்கள். வீழ்ந்த ஸீசரின் புண்களிலிருந்து குருதி வழிந்து கொண்டிருக்கிறது. அந்நிலையில் அண்டோனி (Antony) என்பான் அங்குவருகின்றான். அவன், ஸீசரின் நண்பன் காட்சியைக் கண்டு கலங்கிய அண்டோனி, ஸீசரைக் கொன்றதன் காரணத்தைப் புரூடசிடம் வினயமாகக்கேட்கிறான். அதற்குப்புரூடஸ்,'If then that friend demand why Brutus irose against Cœsar, this is my answer. Not that I loved Cœsar less but that I loved Rome more" என்று மறுமொழி கூறுகிறான். அதாவது, 'ஸீசருக்கு எதிராக ஏன் புரூட்ஸ் கிளம்பினான் என்று அந்தத் தோழன் கேட்பானானால், இதுதான் அதற்குரிய விடை. ஸீசரிடத்தில் நான்செலுத்திய அன்பு, எவ்விதத்திலும் குறைந்ததல்ல. ஆனால், அதைவிட அதிகமாக, ரோம் நகரிடத்தில் அன்புசெலுத்தினேன்' என்பதாகும். அது போல்தான் நாமும் கூறுகிறோம், கம்பனிடத்தில் நாம்

கொண்டிருக்கும் அன்பு எந்த விதத்திலும் குறைந்த தல்ல. ஆனால் திராவிடநாட்டிடம் கொண்டிருக்கும் அன்பு, அதைவிட மிகப் பெரியதாகும் என்று.

மேலும் புருடஸ் கூறுகின்றான்: "As Cœsar loved me I weep for him; as he was fortunate I rejoice at it;as he was valiant I honour him; and as he was ambitious I slew him" அதாவது "சீசர் என்னை நேசித்தான்; அவனுக்காக நான் அழுகிறேன். அவன் நல்வாய்ப்புக்காரன்; அதற்காக மகிழ்கிறேன். அவன் ஆண்மையாளன்; அதற்காக அவனைப் பெருமைப்படுத்துகிறேன். அவன் பேராசை பிடித்தவன்; அதற்காக அவனைக்கொன்றேன்' என்பதாகும். அதுபோல நாமும் கூறுகிறோம். "கம்பன் திராவிடஇனத்தைச் சார்ந்தவன்; அதற்காகஅவனிடம் அன்புகொள்ளுகிறோம். அவன்காவியத்தில் நயங்கள் உண்டு; அதற்காக அவனைப் போற்றுகிறோம். அவன் காவியம் இனத்திற்கு இழிவைக்கொடுத்தது; அதற்காக அதனைக்கொளுத்துகிறோம்" என்று.

மேலும் சொல்லுகிறான் புருடஸ்: "There is tears for his love, joy for his fortune, honour for his valour and death for his ambition" அதாவது "அவனுடைய அன்புக்குக் கண்ணீர்; அவன் நல்வாய்ப்புக்கு மகிழ்ச்சி; அவன் ஆண்மைக்குப் பெருமை; அவன் பேராசைக்கு சாவு" என்பதாகும். அதுபோல, "கம்பனின் இனம் பற்றி அதற்கு எங்கள் அன்பு; கவி நயத்திற்கு எங்கள்மகிழ்ச்சி; புலமைக்கு எங்கள் போற்றுதல்; இனஇழிவுசெய்தற்காக அவன்நூலுக்குத் தீ" என்று

நாம் சொல்லுகிறோம். கலைவாணர்கள் நம்மீது பாய்வதில் பயனில்லை. இனியேனும் கருத்தை யுணர்ந்து, கடமை யைச் செய்ய முந்தட்டும்.

இலக்கியப் பூஞ்சோலையில், புத்தம் புதிய பூச்செடி களை நடுவதிலும் நாம் பின்னடையவில்லை! நமது பெரு மைக்குரிய புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் நட்ட பூஞ்செடி களின் மணம், திராவிடநாடு முழுவதும் பரவிநிற்கின்றது. காலத்திற்கேற்ற கருத்தைக் கவிதைகளிலே காட்டுகின்ற கவிஞனையே, இன்று உலகம் தேடுகின்றது. சிற்பமும், ஓவியமும், இசையும் என்றைக்கும் வளர்க்கப்படக்கூடும். அவற்றிற்குரிய இயற்கை என்றும் இருக்கிறது. ஆனால் கவிஞனே அப்போதைக் கப்போது தேவைப்படுபவன். கடமையைச் செய்யக் கவிஞன்மறந்தால், மக்களின் முன் னேற்றம் தடைப்படும். தடைப்படுவது மட்டுமல்ல, தன் நிலையிலிருந்து இழியவேண்டிவரும். இதைநன்குஉணர்ந்து வாளும் தீப்பந்தமுங்கொண்டு தமிழிலக்கியப் பூஞ்சோலை யில் நுழையும் சுயமரியாதைக்காரனைக்கண்டு, முட்புதர் களிலே ஒளிந்து கிடக்கும் ஆரிய நரிகள் ஊளையிடுகின்ற ன! அவற்றிற்குக் காப்பளிப்பதாகவாக்களித்துக் கல்யாண சுந்தரங்களும் கதிரேசர்களும், அவற்றைத்தட்டிக்கொடுக் கின்றார்கள். இனியுப் தட்டிக்கொடுக்க வேண்டாம் என்று அறிவுறுத்துகிறோம். ஏனென்றால், தட்டிக்கொடுக்கும் கைகள் ஏரளுக்கு இரையாகிவிடும்.

## அறிவியல் வளர்ச்சி

அறிவியல் (Science), அணுவின் ஆற்றலைக் கண்டு பிடிக்கும் அளவிற்கு வளர்ந்தோங்கி வந்திருக்கிறது. மனித அறிவுக்குப் புலப்படாமலிருந்த இயற்கையின் உண்மைத் தோற்றத்தைப், படிப்படியாக அறிமுகப்படுத்திவருவது அறிவியலாகும். அறிவியலின் துணையால் தான்; காட்டுமிராண்டி வாழ்கை நாகரிகநிலைக்கு நகர்ந்திருக்கிறது. அறிவியல் அறிமுகப்படுத்திவைத்த உண்மைகள் சில; அறிமுகப்படுத்தவேண்டிய உண்மைகள் பல இருக்கின்றன. அறிவியலின்பயணம், தொடர்ந்து நடந்துகொண்டேதான் இருக்கும். இத்தகைய அறிவியலின் துணையின்றி, நாகரிக உலகம் முன்னேற்றப் பாதையிலே சுழன்று வந்திருக்கமுடியாது.

அறிவு வளர்ச்சியின்விளைவு அறிவியல்! அதுசிந்திக்கும் மனிதரின் முயற்சியால் உருப்பெறுவது! அந்த அறிவியலைப் பழித்துக் கூறுவதன் மூலம் தம் அறிவு மேம்பாட்டை விளக்கிக் காட்டிக்கொள்வதாகக் கருதுவோர்சிலர், இந்நாளிலும் வாழக்காண்கிறோம். அறிவியலைவெறுப்பதன் காரணமாகப், பழமையைக் காப்பாற்றிவிட்டதாக அவர்கள் எண்ணிக்கொள்கிறார்கள். இத்தகைய பழைமை விரும்பிகள், அறிவியலின் பயனை நுகராமல் இருக்கிறார்களா என்றால், இல்லை! அவர்களுக்குப் பழைமையின் மீது ஒருவித மோகம்! பழைமையைக் காப்பாற்ற வேண்டுமென்றால்,புதுமையைத் தோன்றாமல் செய்யவேண்டிய பொறுப்புப் பழமை விரும்பிகளைச் சார்

கிறது. அறிவியல், அறியாமையைப் போக்கிப் புது மையை விளக்கி வருவதால், அது ஒழிக்கப்படவேண்டும் என்று அவர்கள் கருதுகின்றார்கள். இத்தகையோர், ஏனைய நாடுகளைக் காட்டிலும் இந்தியாவில்—குறிப்பாக நம் நாட்டில்—அதிகமாக இருப்பதனால் தான், மக்களின் வாழ்க்கைத்தரம் உயராமல் இன்னும் இழிந்த நிலையிலேயே இருந்து வருகிறது.

அண்மையில், கோவைநகரில் நடைபெற்ற மாகாண மருத்துவச் சங்க மாநாட்டைத் திறந்துவைத்துச் சொற்பொழிவாற்றிய பேரறிஞரான சர். சி. வி. இராமன், அறிவியல் அறிஞர்கள் தற்காலத்திய ஆராய்சிகளை எடுத்துக்கொண்டு மேன்மேலும் பெருக்க வேண்டுமேயல்லாமல், நமது பழம் பெருமைகளை நினைத்துக்கொண்டிருத்தல் கூடாது என்றும், மனித சமுதாயம் முன்னேற்றமடைந்து வருகிறதென்றும், அறிவியல் ஆராய்ச்சி உலக நன்மையை முன்னிட்டுக் கண்டு பிடிக்கப் படுகிறது என்றும், நாம் முன்னேற வேண்டுமானால் நாம் நமது மனப்பான்மையை மாற்றிக் கொள்ளவேண்டும் என்றும், நாம் பழமையிலேயே எல்லா அறிவும் பொதிந்து கிடக்கிறது என்று எண்ணுவது தவறு என்றும், நாம் நன்கு உழைக்கவேண்டும் என்றும் மிகவே விளக்கியுள்ளார். சர். சி. வி. இராமன், நோபல்பரிசு பெற்ற சிறந்த அறிவியல் அறிஞர். அவர்வருந்திக் கூறுகிறார், நமக்குப்புதுமை வழியே செல்ல எண்ணம் ஏற்படாவிட்டால், மனிதசமுதாய முன்னேற்றப் பாதையிலே சிறிதளவு கூடச்செல்ல முடியாது என்பதை. அந்தச் சொற்பொழிவில்

மேலும் கூறும்போது, அறிவியல் ஆராய்ச்சிகளைக் குறித்து மதிப்பிடும் குறைமதி படைத்தோர், இந்த நாட்களிலும் இருக்கிறார்கள் என்றும், அந்த நிலை அடியோடு மாறவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

சக்கி முக்கிக் கற்களை ஒன்றோடொன்று உராய்ந்து அதிலிருந்து தீப்பொறியினைப் பெறக் கற்றுக்கொண்ட காட்டுமிராண்டிக் காலத்திலிருந்து, அணுவின் ஆற்றலைக் கண்டு பிடித்த இக்காலம் வரையிலும் அறிவியல் பழமையோடு பல போராட்டங்கள் நடத்தியே வளர்ந்து வந்திருக்கிறது. பழமைக்கும் அறிவியலுக்கும் போராட்டங்கள் பல ஏற்பட்டன என்றாலும், ஒவ்வொரு போராட்டத்திலும் அறிவியலே வெற்றிபெற்றிருக்கிறது. அது தான் வெற்றிபெற முடியும். அறிவியலின் பயணம், வேண்டுமென்றால் ஆங்காங்குத் தடைப்படுத்தப்பட்டிருக்கலாமே யொழிய—காலம் அதிகமாகக் கழியலாமே யொழியப், பயணம் முடிந்துவிடாமல் நடந்துகொண்டே தான் இருக்கிறது.

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படுவன வாகிய உழவுத்தொழிலும்; மருத்துவமும் அறிவியலின் துணையினால் மிகஉயர்ந்த நிலைக்கு வளர்ந்து வந்திருக்கின்றன. ஏனைய துறைகளிலும் வசதிகளைப் பெருக்கிக் கொண்டு, இன்ப வாழ்வு நடத்தப் பெரிதும் துணைபுரிந்து வருவது, அறிவியலே யாகும். இயற்கைப்பொருள்களின் (Physics) தத்துவங்களை விளக்கிக், கலவைப் பொருள்களின் (Chemistry) பண்புகளை

எடுத்துக்காட்டி மனிதனின் உடற்கூறுபாடுகளைப் (Physiology) பிரித்துப் பிரித்து உணர்த்தி, மற்ற உயிர்வகைகளின் தன்மைகளை (Biology) யெல்லாம் அறிவுறுத்தி, மரவகைகளின் பண்புகளை (Botany) யெல்லாம் தெளிவுபடுத்தி, மனிதன் தன் வாழ்க்கையை ஏற்ற வண்ணம் அமைத்துக்கொள்ள அறிவியல் அரும்பாடுபட்டுவருகிறது. மனிதவாழ்வின் குறிக்கோளாகிய இன்பத்தை எளிதில் பெற வேண்டிய வசதிகளை யெல்லாம், அறிவியல் செய்து தருகிறது. மனிதன் காணும் கனவுகளை யெல்லாம், நனவாக்கிக்காட்டுகிறது. போர்க்காலங்களில், அறிவியல் தீமைபயக்கும் பயங்கரப் படைகளை உண்டாக்கித்தருகிறது என்று குற்றஞ்சாட்டி, அதனை வெறுக்கத் தலைப்படுகிறார்கள் சிலர். தீமைக்குப் பயன்படும் ஆயுதங்களைச் செய்யும்வழியை அறிவியல் சொல்லிக்கொடுக்குமேயொழிய, ஆயுதங்களைச்செய்யச் சொல்லாது. நன்மைக்கும் தீமைக்கும்பயன்படுத்துவது, மனிதனுடைய மனப்போக்கைச்சேர்ந்தது. குற்றம் மனிதனுடையது; அறிவியலுடையது அல்ல.

மருத்துவத் துறையில் அறிவியல் சாதித்திருக்கும் வெற்றிகளைச், சர். சி. வி. இராமன் குறிப்பிடும் போது, ‘மக்களைக் கொல்லும் கொடியபகைவர்கள் மக்கள் அல்ல; உண்மையில் சிறு, சிறு கிருமிகளே மக்களுக்குத் தீராப் பகையாக விளங்குகின்றன. பார்முழுதும் கட்டி ஆளும் மன்னர்களே அச்சிறு கிருமிகளாவர். அவர்கள் தயவில்தான் மனிதர்கள் வாழ்கிறார்கள்’ என்று நகைச் சுவை படக் கூறியுள்ளார். ‘இறந்தவரை மீண்டும் உயிர் பெற்று வாழும்படிசெய்ய முடியும் என்ற உறுதியோடு,

ரஷ்ய நாட்டு அறிவியல் அறிஞர்கள் விடாமுயற்சியுடன் பாடுபட்டு, ஓரளவுக்கு வெற்றியும் பெற்று வருகிறார்கள். உயிருக்கு முடிவு ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சிச் செய்து கொண்ட ரணசிகிச்சைகளெல்லாம், இன்று மிகமிக எளிதாகச்செய்யப்படுகின்றன. அறிவியலின் பயனாக நாடோறும் வளரும் மருத்துவத்தை, நன்கு பயன்படுத்தக் கற்றுக்கொண்ட நாடுகளில்,மக்கள் நல்வாழ்வு வாழ்கிறார்கள். சராசரி ஐம்பது, அறுபது ஆண்டுகளுக்கு மேல் உயிர் வாழ்கிறார்கள். அங்கெல்லாம் குழந்தைச்சாவு மிகமிகக் குறைவு. இளம் வயதில் இறப்போரின் தொகையும் மிகக் குறைவு. இவற்றிற்கெல்லாம் காரணம், அவர்கள் வாழக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள்.வாழவழியமைத்துக்கொடுக்கும் அறிவியல், அங்குப் போற்றப்படுகின்றது! புதுமை வளர்க்கப்படுகின்றது! இங்குள்ளோர், வாழக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற முயற்சியில்லாத வகையில்,வளர்க்கப்படுகிறார்கள். நாட்டை நடத்திச் செல்லும் துறைகளின் முன்னணியில் எப்படியோ இடந்தேடிக் கொண்டுநிற்பவர்கள்; மக்கள்வாழ்வைப்பக்குவப்படுத்தித் தரும் அறிவியலைப் போற்றி வளர்க்க மறுக்கிறார்கள். எனவே, இங்கு வாழ்வு பூக்கப் புதுமையொளி வீசப் படாதவாறு, தடைப்படுத்தப்பட்ட நிலை இருக்கிறது. காலந்தாழும் என்றகுறை ஏற்படுமே யொழியப்,புதுமையொளிவீசாமல்நின்றுவிடும் என்று அஞ்சத்தேவையில்லை. பழமை விரும்பிகள், புராணக்காரர்கள், மதத்தலைவர்கள், குருமார்கள், புதுமையை வெறுப்பதே விவேகம்

என்று கருதுவோர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், எதிர்த்தாலும் எதிர்க்காவிட்டாலும், தடுத்தாலும் தடுக்காவிட்டாலும், அறிவியல் உலகம் அவர்களை இழுத்துச் சென்றே தீரும் என்பதில் ஐயமில்லை. நமக்கு ஏற்படும் குறையெல்லாம், அறிவியல் மக்களை இழுத்துச்செல்லும் போது, வேகம் மிகப்படாமல் தடை செய்ய, முக்கியமான சிலர் இருக்கிறார்களே என்பதேயாகும்!

அறிவியலின் அவசியம், நம்நாட்டில் நன்கு உணர்த்தப்படவில்லை. அதுஉணர்த்தப்பட்டால்—அதனை மக்கள் உணர்ந்தால், நம்நாடு முன்னேறும் என்பதை, உலக அறிவியல் அறிஞருள் ஒருவரான சர். சி. வி. இராமன் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளார்.

மேனாடுகளில், அறிவியல் ஆராய்ச்சிக் கூடங்கள் (Research Institutes) மிகுதியாகக் காணப்படுகின்றன. அறிவியல் ஆராய்ச்சியில் அவாக்கொண்டு உணர்ச்சியால் உந்தப்பட்டு விளங்கும் மாணவர்கள், ஆராய்ச்சி நடத்துவதற்கேற்ற அமைப்புக் கூடங்கள் ஆங்காங்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. புத்தம்புதிய கண்டுபிடிப்புகள், நாடோறும் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. ஆகையால்தான், மேனாடுகளில் அறிஞர் பெருகுகிறார்கள்; வாழ்க்கையின் வசதிகள், தேவைக்கேற்றவண்ணம்பூர்த்தி செய்யப் படுகின்றன; மக்கள் இன்பவாழ்வு நடத்த ஏது ஏற்படுகிறது. இந்தியத் துணைக்கண்டத்திலே, மிகவும் குறைந்தஅளவு ஆராய்ச்சிக்கூடங்கள் தான் இருக்கின்றன. ஏழு எட்டுத்தான் இருக்கும்போல்காணப்படுகிறது. அது

வும் தென்னாட்டில் ஒன்றும் இல்லையென்றே கூறிவிடலாம். பங்களூரில் மட்டும் ஒன்று இருக்கின்றது. அதை மைசூர் தனியாட்சி கண்காணித்து வருகிறது. தென்னாட்டைப்பொறுத்த வரையில், மக்கள், மூளை வலிவு உடையவர்கள் என்று பலரும் கூறக்கேட்கிறோம். அப்படி இருந்தும், வளப்பமுள்ள அறிவைப் பயன்படுத்துவதற்கேற்ற அறிவியல் ஆராய்ச்சிக் கூடங்கள் இல்லாமலிருப்பது, தென்னாட்டவரின் ஏமாந்த தன்மையைத்தான் காட்டும். நாட்டின் ஆளும் பீடத்தில் இதுவரையில் அமர்ந்திருந்தோர், இந்தத்துறையில் ஊக்கங் காட்டவில்லை. இனியேனும் ஊக்கங் காட்டும்படி ஆளந்தார்களைத் தூண்டவேண்டிய பொறுப்பு, தென்னாட்டறிஞர்களின் நீங்காக் கடமையாகும். கோவை மாநாட்டில், அறிவியல் வளர்ச்சியின் அதிசயத்தை வற்புறுத்திப் பேசிய சர். சி. வி. இராமன், தென்னாட்டவர், மத்தியஇந்திய அரசாங்கம் இதைச்செய்யும் என்று எதிர்பார்ப்பது தவறு என்றும், சென்னை அரசாங்கமே ஆராய்ச்சிக்கூடங்களை நிறுவப் பாடுபடவேண்டும் என்றும் கூறியுள்ளார். தென்னாடு பிறர் தயவை எதிர்பார்த்து நிற்கும் இழிநிலையை மாற்றிக் கொண்டு, தன்காலிலேயே நிற்கும் உறுதியான நிலையைப் பெற்றால்தான், வருங்காலத்தில் வாழமுடியும். வருங்கால உலகை உருவாக்கும் அறிவியல் அறிவு, நாட்டுச்சீரமைப்பு வீரர்களுக்கு ஏற்படும் நிலையை உண்டாக்க, அரசாங்கமும், அறிஞர்களும் பணிபுரிய முன்வரவேண்டும்.

# 4. வரலாறு

"தென் திசையைப் பார்க்கின்றேன்
என்செய்வேன் என்றன்
சிந்தையெலாம் தோள்களெலாம்
பூரிக்குதடடா!"

ஆம்! தென்றிசைத் திராவிடத்தைப் பார்த்துத்தான்! 'எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந்தமிழ் அணங்கு' நடமாடும் திராவிடம்—முச்சங்க இருப்பும், மூவேந்தராட்சியுங் கொண்டிலங்கிய திராவிடம்—யவனரும் சீனரும் உலாவிய நகரங்களையும், ரோம்நாட்டுப் பொன், அரேபியநாட்டுக் குதிரை, ஈழத்தின் உணவு, பர்மியப் பொருள் ஆகியவற்றைச் சுமந்துவரும் மரக்கலங்கள் பலவும் முத்தமிட்டு நிற்கும் துறைமுகங்களையும் கொண்டிருந்த திராவிடம்-வீரஉரைபுகன்று,போர்க்கோலம் பூண்டு புலியெனப் பாய்ந்து, களம்பல வென்ற மறவர்கள் வாழ்ந்த திராவிடம்—தென்புறம் கடலும் வடபுறம் குன்றும் கொண்டு, இயற்கை யன்னையின் எழிற் பீடமாக விளங்கும் திராவிடம்—இதுகாறும் மக்களால் மறக்கப்பட்டு. வரலாற்றாசிரியர்களால் மறைக்கப்பட்டு வந்திருக்கிறது! இம்மறைப்பு நீக்கப்படும்போது, சிந்தையும் தோளும் பூரிப்படைவது இயற்கைதானே!

'திராவிடம்' விளங்கும் துணைக்கண்டமான இந்தியாவின் வரலாற்றை எழுத முன்வந்த வரலாற்றாசிரியரெல்லாம், இதுவரை திராவிடத்தைப் புறக்கணித்தே வந்திருக்கின்றனர். 'இந்திய வரலாறு' எழுதிய மேலை

நாட்டாசிரியர்கள், திராவிடத்தின் வரலாற்றை வேண்டு மென்றே புறக்கணிக்கவில்லை; புறக்கணிக்க நேர்ந்தது. அதன் முழுக்குற்றமும், அவர்களைச் சார்ந்ததல்ல; ஏனெ னில், திராவிடம் அவர்கள் முன் நிறுத்தப்படவில்லை! இத் துணைக்கண்டத்தைச் சேர்ந்த வரலாற்றாசிரியர்கள் வேண்டு மென்றே திராவிடத்தின் வரலாற்றை மறைத் தார்கள். செய்யக்கூடாத செயல்தான்; ஆனால், இந்நாட் டில் செய்தார்கள்!

இந்தியத் துணைக்கண்டத்தில் வரலாற் றாசிரியரா கத் தோன்றுவதற்குரிய வாய்ப்புடைய நிலையில் இருந்த வர்கள், வடமொழியாகிய சமஸ்கிருதத்தையும், அதன் கண் எழுந்த நூல்களையும், வடநாட்டையும், அங்கு வாழ் ந்த மக்களின் வரலாற்றையுமே எழுதி முடித்தார்கள். இந்திய வரலாற்றை ஆராயும்பொருட்டு இங்குவந்த மேலைநாட்டாசிரியர்களிடம், வடமொழி நூல்களும் வட நாட்டுச்செய்திகளும் முன்வைக்கப் பட்டனவேயன்றித், தென்னாடும் அதன் வரலாறும் அவர்களிடம் சுட்டிக் காட் டப்படவில்லை. வடமொழி நூல்களை ஆராய்ந்து, அதன் வயப்பட்டு, அதிற் கூறப்பட்ட செய்திகளை மட்டுமே மேலை நாட்டார்க்கு எடுத்துக் கூறுவதை நீண்டகாலப் பழக்கமாகக் கொண்டிருந்த மாக்ஸ் முல்லர், தம்கடைசிக் காலத்தில்,"என் வாழ்நாளின் பெரும் பகுதியை, வட மொழிநூல்களை ஆராய்வதிலேயே செலவழித்து விட் டேன்.இதைவிடப் பண்பட்ட பழமையான தென்னாட்டு நாகரிகத்தைத் துருவிப்பார்க்க மறந்தேன்" என்று வருந் திக்கூறியதாகச் சொல்லப்படுகிறது. இம்மாதிரியாகவே

மேலைநாட்டு வரலாற்றாசிரியர்களிற் பலர், தென்னாட்டைத் திரும்பிப் பார்க்க மறந்தனர்! தவறினர்!

இந்திய வரலாற்றைத் துருவிப்பார்க்கத்தொடங்கிய மேனாட்டாருள், **சர் ஜான் மார்ஷல், சிலேட்டர்**, **ஹீராஸ் பாதிரியார்** போன்றவர்கள், தென்னாட்டவராகிய திராவிடரின் பண்பட்ட பழமையான நாகரிகத்தின் மேன்மையையும் வரலாற்றின் சிறப்பையும் அறிந்து, உலகுக்கு எடுத்துரைக்கத்தலைப்பட்டனர். 'திராவிடத்தில் வாழ்ந்த திராவிடரே, உலகில் முதன்முதலாக நாகரிகம் பெற்று உயர்ந்த நிலையிலிருந்தோராவர்' என்று, **சிலேட்டர்** கூறியுள்ளார். சிந்துநதி வெளியில் மறைந்து கிடந்த **ஹாரப்பா, மகோஞ்சதாரோ** ஆகிய இடங்களை அகழ்ந்து காணும் ஆராய்ச்சியிலீடுபட்ட **சர். ஜான் மார்ஷலும், ஹீராஸ் பாதிரியாரும்**, அங்குப், பாழடைந்து பூமிக்கடியில் படிந்து கிடக்கும் நகரங்களில்தோன்றி வளர்ந்து மறைந்த நாகரிகம் திராவிட நாகரிகம் என்றும், அக்காலை இவ் விந்தியத்துணைக்கண்ட முழுதும் அந்நாகரிகச் சிறப்புடையமக்களே வாழ்ந்து வந்தனர் என்றும் கூறியுள்ளார்கள். இவ்வாறாக, இயற்கையாலும் பகைவர்களாலும் மறைக்கப்பட்ட—மறக்கடிக்கப் பட்ட திராவிடத்தின் வரலாறு, தோண்டி எடுக்கப்படுகிறது இந்நாளில். தோண்டும் வேலை முற்றுப் பெறவில்லை, ஆரம்பக் கட்டத்தில்தான் இருந்துவருகிறது. இருள்படிந்த திராவிட வரலாற்றின் அடிவானத்தில், இப்பொழுதுதான் ஒளிவீசத்தொடங்கியிருக்கிறது! இந்தச் சிறிதளவு ஒளியில் தென்படும் திராவிடத்தைக் காணும் போதே, 'சிந்தையெலாம் தோள்களெலாம் பூரிக்குதடடா!

இன்று நம்நாட்டு மாணவர் கைகளில் கொடுக்கப்பட்டுள்ள வரலாற்றில், தென்னாட்டுப் பூர்வீகக்குடிகள் திராவிடர்கள் என்ற அளவிலே கூறப்பட்டபிறகு, ஆரியர்வருகைபற்றியும், இராமாயண—பாரதக் கதைகள்பற்றியும், பின் வடஇந்தியாவில் நடைபெற்ற அரசியல் மாற்றங்கள் பற்றியும் சொல்லப்பட்டு, அதற்கும் பிறகுதான் கி. பி. ஒன்பது. பத்து, பதினோராம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த சோழ அரசர்களின் வரலாறு என்ற முறையில், திராவிடத்தின் வரலாறு சிறிதளவு குறிக்கப்படுகிறது. திராவிடத்தில் ஆட்சி புரிந்த பல்லவ சாளுக்கிய ஆட்சிகளைப் பற்றி, அங்குமிங்குமாகச் சில குறிப்புகள் சொல்லப்படுகின்றன. கடைசியாகப், பிரஞ்சு—ஆங்கிலேய ஆதிக்கம் விரிந்த வரலாறு கூறப்படுகின்றது. இந்தஅளவேதான், திராவிடத்தைப்பற்றி அறிய, வரலாற்றின் மூலம் வசதி செய்யப்பட்டிருக்கிறது. தம்சொந்த நாட்டின் வரலாறு, இன்னும் சரியான முறையில் தமிழ்மக்கள் கையில் கொடுக்கப்படவில்லை! வடநாட்டு ஆரியநும் கோசலநும் நந்தர்களும் எடுத்துவந்த படையெடுப்புக்களைத், தமிழக வேந்தர்கள் எப்படி முறியடித்துப் புறமுதுகிட்டு ஓடச் செய்தார்கள் என்ற குறிப்புகள், புறநானூற்றிலும் அகநானூற்றிலும் ஆங்காங்குக் காணப்படுகின்றன. இவையெல்லாம், வரலாற்றுச் சுவடியில் இன்னும் ஏற்றப்படவில்லை. சேரன் செங்கட்டுவனின் வடநாட்டுப் படையெடுப்பு, கரிகால் வளவன் இமயம்சென்று தன் அடையாளமாகிய புலியை இமயத்திலே பொறித்துவந்த சிறப்பு இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன் வீரத்தை இமயம் சென்று முட்டும்படியாகச் செய்த செயல், ஆரியப்

படைகடந்த நெடுஞ்செழியன் ஆரியப்படைகளை முறியடித்து வென்று நின்ற திறம், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்றவனின் வீரநிகழ்ச்சி ஆகியவைகள், திராவிடமக்களுக்கு இன்னும் அறிமுகப் படுத்தப் படவில்லை!

வாடாவஞ்சியின் சிறப்பும், பீடார் உறந்தையின் பொலிவும், மாடமதுரையின் மாண்பும், பூம்புகார், நீர்ப் பெயிற்றுத்துறை, தொண்டி, செந்தில், குமரி, முசிறி போன்ற துறைமுகங்களில் நடந்தேறிய பண்டமாற்றுப் பெருக்கமும். இன்னபிறவும் உணர்த்தப்படவில்லை!

சேரன் பெருங்கடலான அரபிக்கடலைச், சேரன் எப்படிக் கடற்படைத்தளமாகக் கொண்டு விளங்கினான் என்பதும், யவனம், சீனம், காழகம், சாவகம், அரேபியா போன்ற நாடுகளிலிருந்து வணிகக் கப்பல்கள் பொன்னும் மணியும் பிறவும் ஏற்றிக்கொண்டுவந்து திராவிடத்தின் துறைமுகப்பட்டினங்களில் கொட்டிவிட்டு, மிளகுப்பொதிகளையும், அரிசிமூட்டைகளையும், நறுமணச் சாந்துகளையும் அகிலையும், தேக்கையும் ஏற்றிக்கொண்டு போகும் பாங்கும், இந்நாட்டு வரலாற்று ஏடுகளில் இடம்பெற வில்லை!

பொதுவாகப் பண்டைத் திராவிடமக்கள் கொண்டிருந்த பண்புகள், வாழ்க்கை முறை, அரசியல் கோட்பாடு, பொருளாதார நிலைமை ஆகியவற்றை விளக்கிக் காட்டும் அளவில், தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு, பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து, கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்

கள் விளக்கிக் காட்டியிருந்தும், இதுகாறும் தோன்றிய வரலாற்றாசிரியர்கள் இவற்றை யெல்லாம் புறக்கணித்து, வடமொழி நூல்களையே ஆதாரமாகக் கொண்டனர்.

மதுரையின் அருகிலும், திருநெல்வேலியின், பக்கத்திலும் அண்மையில் செய்யப்பட்ட புதை பொருள் ஆராய்ச்சியின் பலனாக, ரோம்நாட்டு நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை, யவனரின் நடமாட்டம் திராவிடத்தில் இருந்த வரலாற்றைத் தெளிவாக்குகின்றன. வாழ்ந்து—கடலால் அழிந்து—இன்று மணற்பரப்பாகக் காட்சியளிக்கும் காவிரிப்பூம் பட்டினம், பண்டை உருமறைந்து வேற்றுருவில் நின்று நிலவும் உறையூர், சேரன் வாழ்ந்த வஞ்சிக்கோடு, பாண்டியன் ஆண்ட மதுரை, சோழன் ஆண்ட தஞ்சை, பல்லவர் ஆண்ட காஞ்சி போன்ற நகரங்களில் வரலாற்றுச் சிறப்புடைய பகுதிகளை அகழ்ந்து கண்டால், பழையசின்னங்கள் அகப்படக் கூடும். அந்தவேலையைச் செய்ய அரசாங்கம் முன்வரவில்லை. முன்வருமா என்பதும் ஐயப்பாடே! திராவிடத்தின் வரலாற்றைச் செப்பனிடுவதிலே,இன்னமும் அக்கரை பிறக்கவில்லை; பிறந்தால், நாட்டின்மீது நல்லொளிவிழும் என்பது திண்ணம்!

திராவிடம் வந்துசென்ற ஐரோப்பிய அறிஞர்களை யன்றி, இடைக்காலத்திலும் அதற்கு முன்பும், கிரீஸ், அரேபியா,பாரசீகம், சீனம் ஆகிய நாடுகளிலிருந்து திராவிடத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டுச் சென்ற அறிஞர் சிலர்,குறிப்புகள் எழுதிவைத்திருக்கிறார்கள். அவர்களில்

லாம் திராவிடத்தைக் கண்டவிதம் எவ்வாறு என்பதை, இளம் மாணவர்களின் உள்ளத்தில் நாட்டுப்பற்றுக்கிளர்ந் தெழும் வண்ணம் இன்னமும் முன்வைக்கப்பட வில்லை.

"திராவிடக்கலை" என்று சிறப்பித்துச் சொல்லக்கூடிய சிற்பக்கலைச் சின்னங்களும், ஓவியக்கலைச் சின்னங்களும் தெளிவறிவால் உணரப்படாமல், அலட்சியம் என்னும் மூடுபனியால்மூடப்பட்டுக்கிடக்கின்றன. கிரீக்கியநாட்டின் சிற்பக்கலைச் சின்னங்களாக விளங்கும் பளிங்குச்சிலைகள், இன்று உலகோர் போற்றும் தன்மையில் கண்காட்சிச் சாலைகளில் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்தச்சிலைகளிற் பல கடவுளரின் உருவங்களெனக் கருதப்பட்டன வென் றாலும், இன்று அவற்றின் கலைச்சிறப்பைஉணரும்அளவுக் கே போற்றப்படுகின்றனவே யல்லாமல், "கேட்டவரம ளிக்கும் கீர்த்தி வாய்ந்த தெய்வங்களாகக்" கருதப்பட வில்லை. திராவிடத்தின் பலபாகங்களிலும் சிற்பக்கலைச் சின்னங்களாக விளங்குபவை, பெரும்பாலும் கடவுள் என்று கருதப்படும் கற்பனைப் பொருள்களின் உருவங் களே. கிரீக்கிய நாட்டுப்பளிங்கு வேலையைக்காட்டிலும், சற்றுக்கடினமான நுண்மாண் வேலைப்பாடுடையது கருங் கல் வேலை. கருங்கற்களில் செதுக்கி எடுக்கப்பட்டஉருவங் கள், திராவிடக்கலையின் சின்னங்களாக நாட்டின் பல பாகங்களிலும் இலங்குகின்றன. அவைகளெல்லாம், கண் காட்சிகளுக்கு அகற்றப்பட வேண்டும். அல்லது அவை இருக்கும் கோயில்கள், கண்காட்சிச்சாலைகளாக மாற்றப் படவேண்டும். மக்கள் ஒழுக்க அறிவுக்கு மாறுபட்டு ஆபாசமாக விளங்குவனவற்றை நீக்கி, ஏனையவற்றைக்

கண்டுகளிக்க மக்கள்முன்னால் நிறுத்தப்படின், திராவிடக் கலையுணர்வு தெளியப்படும்.

தமிழகக் கோயில்களின் கோபுரஅமைப்பு, தூண்களின் உச்சியில் மண்டபத்தைத் தாங்கிநிற்கும் கொடுங்கைகள், சிங்கத்தின் வாயில் வெளியெடுக்க முடியாதவாறு உள்குடைந்து செதுக்கி அமைக்கப் பட்டிருக்கும் உருண்டையான கருங்கற் பந்து, கருங்கற்சங்கிலி, தஞ்சையிலிருப்பது போன்ற காளைமாடு, விட்டங்கள், விமானங்கள் இன்னபிற 'திராவிடக் கலைச்சிறப்பு' (Dravidian architecture) என்று புகழ்ந்து கூறத்தக்கனவாகும். அவற்றை யெல்லாம், வழிபாட்டிற்குரிய—மதிபிழந்து மண்டியிட்டு வணங்குவதற்குரிய பொருள்களாக்காமல், கண்டுகளித்தற்குரிய கண்காட்சிப் பொருள்களாக மாற்ற வேண்டும். அப்பொழுதுதான், அவை ஒவ்வொன்றும் வரலாறு கூறிநிற்கும்!

திராவிடம் இன்று இருண்டஉலகில் நிற்கிறது! அதனை ஒளியுலகிற்கு இழுத்துவர, அறிஞர்கள், வரலாற்று உண்மைகள் என்னும் ஒளிக்கதிர்களை அதன்மீது விழும்படிசெய்ய முயலவேண்டும். அப்பொழுதே, மறைந்த திராவிடம் மக்கள்முன் வரும் என்பது உறுதி!

சிலநாட்களுக்கு முன், மதுரையில் நடைபெற்ற தமிழ் விழாவுக்குத் தலைமை தாங்கிய அறிஞர் ஆர். கே. சண்முகம் அவர்கள், திராவிடத்தின் வரலாறு திருத்தி அமைக்கப்படவேண்டும் என்னும் கருத்துப்படப் பேசியுள்ளார். அவர் கூறியதாவது:—

''தமிழகத்தைப்போல் மொழிக்கும் பண்பாட்டிற்கும் சிறப்புக்கொடுத்த நாடு, உலகில் வேறு எங்கும் இல்லை. தமிழ்ப்பண்பாடு சீரழிந்ததற்கு ஒரு காரணம், இந்திய வரலாறு எழுதிய மேலைநாட்டு வரலாற்றாசிரியர்கள், தங்களுக்கு வேண்டிய வரலாற்றுச் செய்திகளைச் சமஸ்கிருத நூல்களிலிருந்து எடுத்துக் கொண்டதேயாகும். இது, திராவிட அல்லது தமிழ் நாகரிகத்திற்குப் பிற்பட்டதான ஆரிய நாகரிகத்திற்கு, அதிகச் சிறப்புக் கொடுக்கும்படி கொண்டுபோய்விட்டது. ஆராய்ச்சியாளர்கள் அண்மையில் கண்டுபிடித்த கண்டு பிடிப்புகளிலிருந்து, திராவிட அல்லது தமிழ் நாகரிகம், ஆரியத்தை விடத் தொன்மை வாய்ந்ததாகும் என்பது 'பெறப்படுகின்றது'' என்பதாகும்.

சர். ஜான்மார்ஷல், ''இந்திய வரலாற்றின் தொடக்கம், வைகையாற்றிலிருந்து ஆரம்பிக்கப்படவேண்டும்'' என்று, வலியுறுத்திக் கூறியுள்ளார். ஆகவே, இந்தியத் துணைக் கண்ட வரலாறு தொடங்கப்படவேண்டிய இடம், வடநாடல்ல; வைகையாறு! கங்கைக் கரையல்ல; காவிரிக்கரை!

## 5. சமுதாயம்

சமுதாயம்! மக்கள் கூடி வாழும் தன்மையைக் குறிக்குமொரு சொல். சமுதாய அமைப்பு, நாகரிக வளர்ச்சியின் அறிகுறி!

கல்லும் முள்ளும் நிறைந்த இருள் சூழ்ந்த காடுகளில், விலங்குகளோடு விலங்காய்த் திரிந்து வந்த மக்கள், தங்களை அழிக்கும் இயற்கைச் சக்திகளை எதிர்த்து வாழவேண்டி, கூட்டுப் படை அமைக்கும் வேலையில் முனைந்தனர். தங்களைக் காப்பாற்றிக்கொள்ள ஏற்படுத்திக்கொண்ட கூட்டமைப்பு, நாளடைவில் சமுதாயமாயிற்று.

சமுதாய அமைப்பு வளர வளர, அதற்குரிய கட்டுப்பாடுகளும், நெறி முறைகளும், திட்டங்களும் அவ்வப்போது ஒவ்வொரு நாட்டிலும் வகுக்கப்பட்டன. ஒரு காலத்தில் ஏற்பட்ட அமைப்புப் பயன்படாத பொழுதுப், பாதகம் விளைக்கும் போதும் தொடர்ந்து வந்த காலத்தவர், சமுதாயத்தைத் திருத்தி அமைக்கத் தலைப்பட்டனர். சமுதாய அமைப்பு, இன்னும் முற்றும் முடிந்ததொரு நிலையை உலகில் அடையவில்லை; அடையுமாவென்பதும் ஐயப்பாடே! சமுதாயச் சீர்திருத்த வேலைகள், எல்லா நாடுகளிலும் இன்னும் நடைபெற்றுக்கொண்டுதானிருக்கின்றன.

மக்களுள் ஒருவர் மற்றொருவரைப்போல் காணப்படுவதில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் குறைபாடுடையவராகவே காணப்படுகின்றனர். அந்தக் குறைபாடுகளுக்கு, அவர்களே முழுக்காரணமாக மாட்டார்கள்.

அத்தகைய குறைபாடுகள் இருப்பதற்குரிய காரணத்தை, இயற்கையும் விளக்கிக்காட்டியதில்லை. எல்லோரும் ஒன்று சேர்ந்து சமுதாயமாகும்போது, மக்களிடத்தில் தனித் தனியே காணப்படும் குறைகளால், மக்களின் பொது இன்ப வாழ்வு சீர் குலைக்கப்படாமல் பாதுகாக்கக், கட்டுப்பாடுகள் விதிக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அப்படி ஏற் படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளைத் தங்கள் சொந்த நன்மையை எண்ணியும், மற்றவரின் உரிமைகளைப் பறிக்கவேண்டியும் ஆணவக்காரர்கள் பயன் படுத்த முன்வரும்போது, அவர் களையும், அவர்கள் ஆதிக்கத்தையும் ஒழிக்கச் சமுதாயப் போராட்டங்களும், புரட்சிகளும் நடைபெறுகின்றன.

மனிதன், தனக்கு முன்பிருந்தோரின் வாழ்க்கை முறையை முன் மாதிரியாக நிறுத்திக்கொண்டு, அதை அப் படியே வைத்துக்கொண்டோ, அல்லது அதில் சிறிது திருத் தஞ் செய்துகொண்டோ, அல்லது அதை மாற்றியமைத்துக் கொண்டோ வாழ்ந்துவிட்டுப் பின் மடிகிறான். அவனுடைய வாழ்க்கை முறை, வருங்காலச் சந்ததிக்கு முன்மாதிரியாக அமைகிறது. ஆகவே, இறந்த காலங்களுக்குக் குழந்தை யாக விளங்கிய மனிதன், வருங்காலத்திற்குத் தந்தை யாகிறான்.

ஒவ்வோர் உயிருக்கும் இயற்கையாக ஏற்படும் விழைவு, இரண்டு. ஒன்று பசியாறி இன்பந் துய்த்தல்; மற்றொன்று தன் துணையோடு சேர்ந்து இன்பந்துய்த்தல். காட்டு மிராண்டி நிலைக்கு முன்பு மனிதன் கொண்டிருந்த வாழ்க் கைக் குறிக்கோள்கள், உணவு தேடுதல், இனஞ்சேர்தல்

என்ற அளவோடு நின்றன. சிறிது அறிவு விளக்கம் பெற்ற காட்டுமிராண்டி நிலையில், உண்ண உணவோடு உடுக்க ஆடையும், இருக்க வீடும் மனிதனின் உடலுக்குத் தேவைகளாயின. இசையும், கூத்தும், காதல் விளையாட்டுகளும், வீரச் செயல்களும் மனிதனின் உணர்ச்சிக்குத் தேவைகளாயின. காட்டுமிராண்டி நிலையில் உடலுக்கும், உள்ள உணர்ச்சிக்கும் ஆன தேவைகள், மிகவும் குறைந்திருந்தன. நாகரிக வளர்ச்சி ஏற்படவே, தேவைகளும் மிகுந்து விளங்கத் தொடங்கின தேவைகளுக்குக் கட்டுப்பட்டவனானான் மனிதன்.

காட்டுமிராண்டிக் காலத்தில் மனிதன் தோற்றங்களாலும், அவை உள்ளத்தில் ஏற்படுத்தும் உணர்ச்சிகளாலும் கட்டுப்படுத்தப்பட்டான். அவனுடைய மூளை, உள்ளத்தில் ஏற்படும் உணர்ச்சியை எதிர்த்து நிற்கும் ஆற்றலற்றது. பொருள்கள் எப்படித் தோற்றமளித்தனவோ, அவ்வளவே அவன் அறிவு வளர்ச்சி. ஏன்? எப்படி? எதற்கு? இந்தக் கேள்விகளுக்கு விடை அவனுக்குத் தெரியாது. கேள்வியே கூடக்கேட்கத் தெரியாது. பிறகு இயற்கையில் ஏற்படும் தோற்ற மாறுதல்களைக்கண்டு, அம்மாறுதல்களைச் செய்யக் கூடிய அறியாப்பொருள் ஒன்று இருக்கிறது என்ற நம்பிக்கையைக் கொள்ளத் தொடங்கினான். தேவைப்படும் எல்லாப் பொருளையும், நம்பிக்கையின் அடிப்படையாக எழுந்த அறியாப் பொருள் கொடுத்துதவும் என்று கருதினான். அவன் செய்யும் செயல்கள் அனைத்திற்கும் ஆதாரமாக, அந்த நம்பிக்கை விளங்கத் தொடங்கிற்று. அவன் வழிவழி வந்த மக்கள், அந்த முறையைக் கடைப்

பிடிக்கத் தொடங்கினர்கள். ஒரு கூட்டத்தார் மட்டுமல்ல, பலரும்; ஒரு நாட்டில் மட்டுமல்ல, பலநாடுகளிலும்; ஒரு காலத்தில் மட்டுமல்ல, பல காலங்களிலும். இவ்வகையில் தொடர்ந்த பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளில், மனிதனின் அறிவு சிறிது சிறிதாக—ஆனால் பல கஷ்ட நஷ்டங்களுக்கிடையே, வளர்ந்து வரலாயிற்று.

காணவியலாத—கேட்கமுடியாத—உணராப் பொருளாகிய கடவுள், சமுதாயத்தில் முக்கியதொரு நடுவிடத்தில் நிறுத்தப்பட்டுவிட்டதால், சமுதாயத்தில் காணப்படும் அவ்வளவுக்கும், அதனிடத்திலே சமாதானம் காட்டும் முறையில் தான், இதுவரையிலும் நிலைமை இருந்து வந்திருக்கிறது. அந்த நம்பிக்கை நிலையிலிருந்து, உண்மை அறிவு நிலைக்கு மக்களை இழுத்துச்சென்று கொண்டிருப்பது அறிவியலாகும்! அறிவியல், ஏன்? எப்படி? எதற்கு? என்ற வினாக்களுக்கு விடை கொடுத்துக்கொண்டு, மெள்ள மெள்ளச் சமுதாயத்தை உருட்டிச் செல்லுகிறது. உருட்டிச் செல்லும் போது, மதம் முட்டுக்கட்டை போடுகிறது என்றாலும், முட்டுக்கட்டையைத் தாண்டித் தாண்டிக் குதித்துக்கொண்டே அறிவியல் நகர்கிறது!

சமுதாயம் வளர, சீரடைய, நன்மைபெற, அறியாமையிருள் நீங்கப்பெற்று அறிவொளி பெறவேண்டும். வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களுக்கும் துயர்களுக்கும், கஷ்டங்களுக்கும் நஷ்டங்களுக்குமுள்ள காரணங்களை, இதுவரையிலும் மக்கள் விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டிருக்கும் மதம் விளக்கிக்காட்டவில்லை. அதை அறிவியல்

தான் விளக்கிக்காட்டிக்கொண்டு வருகிறது. கடவுள், மனிதனுக்கு உதவி செய்ததில்லை. செய்திருக்கிறதென்றால், எவ்வளவோ மாறுதல் மனிதன் முயற்சி சிறிதளவுமின்றி ஏற்பட்டிருக்க வேண்டும்; இம்மியளவும் ஏற்படவில்லை. வழிபாடு, யாருக்கும் வளத்தைக் கொடுத்ததில்லை. கொடுத்திருக்கிற தென்றால், வழிபட்டோர்க்கெல்லாம் கொடுத்திருக்கவேண்டும்; ஆனால் கொடுக்கவில்லை! ஆகவே, மனித சமுதாயத்தில் அறிவுக்கெட்டாத கடவுள் நம்பிக்கை ஒழிந்துபோகுமேயானால், மனித அறிவுக்கு எட்டக்கூடிய இயற்கையின் உண்மையைக் கண்டு பிடித்து, வாழ்க்கைக்கும் பயன் படுத்தும் அறிவியலறிவு வளர வசதி ஏற்படும்.

எல்லையறு பரம்பொருள் என்று கருதப்படும் கடவுள், வறண்ட வாழ்வினர்க்கு வாழ்வளிக்கக் காணோம்! வீடற்றோர்க்கு வீடு, ஆடையற்றோர்க்கு ஆடை, உணவற்றோர்க்கு உணவு அதன் உதவியால் கிடைக்கவில்லை! அக்கடவுளால், அறியாமை அகற்றப்படவில்லை! அடிமை நிலை நீக்கப்படவில்லை! உயிரை உயிரே கொன்று தின்னும் கொடுமை ஒழிக்கப்படவில்லை! இத்தகைய குறைபாடுகளெல்லாம், மனிதனது முயற்சியால் சிறிதளவாவது நீங்கக் காண்கிறோம்; ஆனால், எல்லாம் வல்ல எல்லையறு பரம்பொருள் என்று கருதப்படும் கடவுளால், இம்மி அளவேனும் திருத்தப்பட முடியாமல் இருப்பானேன்? ஆகவே, கற்பனைக் கடவுளின் உதவி தேடி அலுக்கும் மடமைத்தன்மையினின்றும் மாறித், தன்னாற்றலிலும் தன்னறிவிலும் மனிதன் நம்பிக்கை கொண்டு செயல்புரிய முற்படும் போதுதான், சமுதாயம் வளர வழி ஏற்படும்.

அன்றாட வாழ்க்கையில் தன்னாற்றலிலும், தன்னறிவி லும் தன்னை யறியாமலே நம்பிக்கை கொண்டுதான், மனி தன் செயலாற்றிவருகிறான். அறிவியலின் பயனால் தோன்றி யிருக்கும் அவ்வளவு இயந்திரங்களும் சாதனங்களும், கட வுள் சொல்லிக்கொடுத்துக் கண்டு பிடிக்கப்பட்டன அல்ல. அவைகளெல்லாம், மனிதனது தனிப்பட்ட முயற்சியின் விளைவுகள்! தவமோ, வழிபாடோ, மந்திர உச்சாடனமோ, தானதரும பலமோகொண்டு, நம்முன் காணப்படும் பல பொருள்களும் கண்டு பிடிக்கப்படவில்லை. கடிகாரம் பழு தாகிவிட்டால், அதைச் சீர்திருத்த யாரும் கடவுளின் உத வியை நாடுவதில்லை. கடிகாரத்தின் முழு அமைப்பையும், மனிதனே அறிகிறான். அதில் ஏற்படும் பழுதுகளை அவனே உணர்கிறான். அதைச் சீர்திருத்தி அமைக்கும் அறிவும், தன்னிடத்திலிருப்பதாகவே அவன் கொள்ளுகி றான். தன்னாற்றலையும், தன்னறிவையும் பயன்படுத்திக் கடிகாரத்தைப் பழுது பார்த்த பிறகு, 'கடவுளின் கிருபை' யால் அது சரியாயிற்று என்று எண்ணும் பண்பே, சமு தாயத்தை அரித்து வருகிறது என்று கூறுகிறோம். அது போலவே, சமுதாய அமைப்புகளை ஏற்படுத்தியவன் மனி தன்; அதன் முழு விபரமும் அறிந்தவன் மனிதன். கடி காரத்தில் ஏற்பட்டிருக்கும் பழுதிற்குக் காரணங் கண்டு பிடிக்க மனிதன் கற்றுக்கொண்டிருப்பதுபோலவே, சமு தாய அமைப்புகளில் ஏற்பட்டிருக்கும் கோளாறுகளையும் கண்டு பிடிக்கும் அறிவுள்ளவன் மனிதன். கடிகாரத்தைச் சீர்திருத்தவோ, மாற்றியமைக்கவோ மனிதனால் முடிவது போலவே, சமுதாயக் கோளாறுகளைத் திருத்தவும், மாற்றி யமைக்கவும் ஆற்றல் படைத்தவன் மனிதன். சமுதாயத்

தில் காணப்படும் நன்மை, தீமை முறைகளுக்கு மனிதனே காரணம்; மனிதன் நினைத்தால் அறிய முடியும்; முயன்றால் திருத்தவோ, மாற்றவோ, அழிக்கவோ முடியும் என்ற எண்ணம் மக்கள் பால் அரும்பும்போது தான், சமுதாயம் இன்பபுரிப் பயணம் ஆரம்பிக்க முடியும். சமுதாயத்தில் இன்று காணப்படும் அவ்வளவுக்கும், கடவுளே காரணம் என்று கற்பிக்கப்பட்டுவிட்டது. நன்மைகள், குற்றங் குறைகள் அனைத்திற்கும் அவரே காரண கர்த்தா என்ற எண்ணம், மக்கள்பால் மதத்தால் ஊட்டப்பட்டுவிட்டது. அந்த எண்ணம் ஏற்பட்ட பிறகு, சமுதாயத்தை மாற்றியமைக்க அஞ்சி, மக்கள் அடங்கி ஒடுங்கி மாண்டு மடிகின்றனர்.

சமுதாயத்தில் உயர்ந்தவன் தாழ்ந்தவன் இருப்பானேன்? என்று கேட்டால், 'கடவுளின் திருவிளையாடல்' என்று பதிலளிக்கப்படுகிறது. எனவேதான், கடவுளுக்கு அஞ்சி வாழும் மனிதன் தாழ்ந்த நிலையிலேயே இருந்து, அதை மாற்றியமைக்கச் சிறிதும் எண்ணங் கொள்ளாமல், கடைசியில் மடிகிறான். பணக்காரன்-- ஏழை இருப்பதற்குக் காரணம்? 'கடவுளின் ஏற்பாடு'! முதலாளி—தொழிலாளி நிலவுவதற்குக் காரணம்? 'கடவுளின் விருப்பம்'! பிரபு—பஞ்சை வாழக் காரணம்? 'கடவுளின் கட்டளை'! இப்படியாகப் பதில் கொடுக்கப்படும் தன்மையை மக்களிடத்து மதக் குருமார்கள் ஏற்படுத்திவிட்டதால் தான், ஒரு சிலர் உல்லாச வாழ்வில் வாழவும், பலர் துயர நிலையிலிருக்கவுமான நிலைமை சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கிறது. மன்னன், மதக் குரு என்ற இரண்டு கழுகுகளும், பல்லாயிரக்

கணக்கான ஆண்டுகளாகக் கடவுளைக் காட்டிச் சமுதாயத்தின் உடலையும், உள்ளத்தையும் முறையே அடிமை கொண்டு, மக்களின் இரத்தத்தை உறிஞ்சி வந்திருக்கின்றன. அந்த இரண்டு கழுகுகளினாலும் ஏற்படுத்தப்பட்ட கட்டுத்திட்டங்கள் உடைக்கப்பட்டுப், பகுத்தறிவின் பாற்பட்ட—நீதி நேர்மையினால் உண்டாக்கப்பட்ட புதிய பாதையில் சமுதாயம் செலுத்தப்படவேண்டுமானால், சமுதாயப் புரட்சிகள் ஏற்பட்டே தீரவேண்டும்.

வாழ்வுக்குத் தீமை பயக்கும்—மக்களைப் பிரிவு படுத்தும்—பகுத்தறிவுக்கு முரண்பட்ட பழமைக் கருத்துக்கள் அனைத்தும், அழிக்கப்படவேண்டும். மனித அறிவுக்குட்பட்ட அனைத்தையும் வாழ்வுக்கேற்ற முறையில் பயன் படுத்தும் உணர்வு, சமுதாயத்தில் ஏற்படவேண்டும். மனிதனுடைய தேவைகள் அனைத்தும் எல்லோர்க்கும் தேவையான அளவுக்குக் கிடைக்கப்பெற்றுப், பிணக்குகளுக்கும் பிரிவுகளுக்கும் இடம் ஏற்படாவகையில், சமுதாயக் கட்டுத்திட்டங்களை மாற்றியமைக்க ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும். ஒவ்வொருவரும் தங்களாலான கடமைகளைச் செய்ய முன்வரின், சமுதாயம் புதிய பாதையில் உருண்டு விரைந்தோடும் என்பது திண்ணம். புதிய பாதையில், வைதீக வளைவுகள், சனாதனச் சருக்கல்கள், பழமையென்னும் படுகுழிகள், மூடப் பழக்க வழக்கமென்னும் முட் புதர்கள் இல்லாமற் செய்ய, இளைஞர்களின் சலியா உழைப்புத் தேவை.

அறியாமை யிருள் நீங்கி அறிவொளி எங்கும் வீசப் பட்டால், அப்பொழுது இன்பபுரியை நோக்கி மக்கட் சமுதாயம் நகரும்!

## 6. பொருளாதாரம்

'பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும், பொருளல்ல தில்லை பொருள்' என்பது வள்ளுவர் கூற்று. மனிதவாழ்வின் இன்றியமையாத—முக்கிய—தேவையானதாக, இன்றைய உலகியல் நிலையில் அமைக்கப்பட்டிருப்பது பொருள். உயிருக்குக் கொடுக்கப்படும் மதிப்பைவிடப், பொருளுக்கே அதிக மதிப்புக் கொடுக்கப்படுகிறது. 'பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும்', 'ஈட்டி எட்டின வரையிலும் பாயும், பணம் பாதாளம் வரையிலும் செல்லும்', 'பணம் பந்தியிலே, குணம் குப்பையிலே', 'ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்' என்பன போன்ற பழமொழிகள், பணத்திற்கு அதாவது பொருளுக்கு, வாழ்வில் முக்கியமேதோர் இடம் ஏற்பட்டுவிட்டதை உணர்த்தி நிற்கின்றன.

காட்டு மிராண்டி நிலையில், மனிதன், தன் தேவைகளைத் தான் நினைத்தபடி நிறைவேற்றிக்கொள்ள முடிந்தது. அப்பொழுது பணம் நடமாடவில்லை. காட்டுமிராண்டிக்குத் தேவைகள் மிகமிகக் குறைந்து காணப்பட்டதால், அதை நிறைவேற்றிக் கொள்ளவே தன் உடல் வலிவையும், அறிவுத்திறனையும் செலவழித்தான். தேவை நிறைவேற்றப்பட்டவுடன், அவனுக்கு வேலை இருப்பதில்லை. தேவைக்கு மேற்பட்ட பொருளைக் குவித்துக் காப்பாற்றி வைத்துக் கொள்ள வேண்டும் என்ற நினைப்பு, அப்பொழுது அவனுக்கு ஏற்படவில்லை. அறிவினைக் கொண்டோ, ஆற்றலைக் கொண்டோ, பிறர் பொருளைச் சுரண்ட வேண்டும் என்ற ஆசை பிறக்காத காலம் அது.

மனிதனது தேவைகள் மிகவே, அவன் தன் ஒருவனுடைய அறிவு ஆற்றலைக்கொண்டு, அவை யெல்லாவற்றையும் அடைவது என்பது முடியாததாயிற்று. அந்த நிலையில், பிறரோடு கூடி, அவற்றைப் பெற்றுத், தேவையான அளவைத் தனித்தனியே பகிர்ந்து எடுத்துக்கொள்ளும் முறையைக் கைக்கொண்டான். அறிவு வளர்ச்சி ஏற்பட்டு, நாகரிக வாழ்வை மனிதன் நடத்தத் தொடங்கிய காலத்தில், தேவைகள் மிகவும் பெருகிக்காணப்பட்டன. அப்போது கைத்திறனும் வாய்த்திறனும் கொண்டவர்கள், கண்மூடி மக்களது பொருளையெல்லாம் கொத்திக்கொண்டு ஏப்பமிடத் தொடங்கினர். தன்னுடைய சக்திக்கு மீறிய உழைப்புப் பிறரிடத்தில் இருக்கவே, அந்த உழைப்பினைக் கொண்டு அவர்கள் திரட்டிய பொருளைத் தான் அடையப், பண்ட மாற்று முதலிய பல முறைகளை ஏற்படுத்தித் தேவையானவற்றைச் சேர்த்து வைத்துக்கொண்டு, அவ்வப்போது தன் வாழ்க்கைக்குப் பயன்படுத்தத் தொடங்கினான். முதலில் தனக்கு வேண்டிய உணவு உடை உறையுள்போன்ற பொருள்களைத் தேவையானபொழுது பெற்றுக்கொண்டு வந்த மனிதன், நாளடைவில் தேவையான பொருள்களைத் திரட்டி வைத்துக்கொண்டு உரிமை பாராட்டத் தொடங்கினான். இதனால், ஒருவன் ஆதிக்கத்தில் அமையும் பொருள், அவனுக்கு உரிமையுடையதாகும் என்ற நிலைமை ஏற்பட்டது. ஒருவன் தனக்குரிய பொருளைப் பிறர்க்குரிய தொரு—ஆனால் தனக்குத் தேவையான—பொருளுக்கு ஈடாகக்கொடுத்து மாற்றிக் கொள்ளும் நிலைமை ஏற்பட்டபோது, மனிதனின் உரிமைகள் மாற்றிக்கொள்ளகூடிய தன்மைகளுடையனவாயின.

உரிமைகள் மாற்றிக் கொள்ளக்கூடியனவாக ஆன பொழுது, உழைப்போரிடம் பொருள் தங்குவதில்லையாயிற்று. மக்களில் கைத்திறனும் வாய்த்திறனும் கொண்டவர்கள், மற்றவரின் உழைப்பினுல் உருவாகும் பொருள்களைத் தமதாக்கிக்கொண்டு, உல்லாசவாழ்வு வாழத் தொடங்கினர். ஏதும் அறியாக் கண்மூடி மக்கள், உழைப்பினுல் கிடைத்த பொருளைப் பிறர்க்குக் கொடுத்து விட்டு, வறிய வாழ்வு வாழலாயினர். இப்படியாகப் பொருளாதாரத் துறையில், பணக்காரன்—ஏழை என்ற இரு பிரிவினர் ஏற்பட்டனர். பிறரது உழைப்பினையே விலைக்கு வாங்கிக்கொள்ளும் வாய்ப்புக்கொண்ட பணக்காரன், முதலாளியானுன். உழைப்பினைக் குறைந்த விலைக்கு விற்றுவிட்டு வாழும் நிலையிலிருப்போர், தொழிலாளிகளாயினர். பொருளாதாரம் காரணமாக ஏற்பட்டிருக்கும் பணக்காரன்—ஏழை, முதலாளி-தொழிலாளி, பிரபு-பஞ்சை போன்ற பிரிவுகள் நிலைத்திருக்கும்படியாகவே, இன்றைய சமுதாயச்சட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன

உழைக்க ஒரு பிரிவினரும், பிறர் உழைப்பினை உறிஞ்சி வாழ வேருேர் பிரிவினரும் வாழும்படியாகவே, இன்றைய சமுதாய நீதி தீட்டப்பட்டிருக்கிறது. ஒரு பணக்காரனுக்கு ஒருவன் பிள்ளையாய்ப் பிறந்து விடுவதன் காரணமாகவே, அவனுடைய சொத்துக்கெல்லாம் இவன் உரிமை யுடையவன் என்ற சட்டமும், சமுதாயத்தில் இன்று நின்று நிலவுகிறது. ஆகவேதான், மக்கள் எல்லோரும் மக்களாகவே வாழவேண்டுமானுல், பகுத்தறிவு

நீதிக்குப் புறம்பானதாக விளங்கும் தனிச் சொத்துரிமை முறை ஒழிக்கப்பட வேண்டும் என்று, அறிஞர்பலர் கூறு கின்றனர்.

மக்களெல்லோரும் உழைக்கும் படியான நிலையை, சமுதாயமும் அரசியலும், இன்னமும் பலநாடுகளில் வற் புறுத்தவில்லை. உழைப்பாளிகளின் உழைப்பால் உரு வாகும் பொருள்கள், உழைக்காதவர்களுக்குப் போய்ச் சேருகிறது. உற்பத்திப்பொருள் பரப்பப்படும் போது, அப்பொருளுக்கு உண்மையாகவே உரிமையுடையவனிடம், அது தேவையான அளவுகூடப் போய்ச் சேருவதில்லை. உழைக்காதவர்களுக்குத், தேவைப்பட்ட அளவுக்கு மேல் சென்று குவிகிறது. சமுதாயத்தில் இத்தகைய பொருளா தார வினியோகமுறை இருப்பதால்தான், இரு வேறு பிரிவுகள் உண்டாகின்றன. ஒன்று வாழுகிறது; மற் றொன்று வாடி வதங்குகிறது! ஒன்று தேவைக்குமேற் பட்டதைக் கொண்டிருக்க உரிமை கொண்டாடுகிறது; மற் றொன்று உள்ளதையும் கொடுத்து விட்டு உழலுகின்றது! ஒன்று ஆணவ ஆதிக்கவெறி கொள்கிறது; மற்றொன்று அடிமை நிலை ஏற்கிறது!

ஒரு பொருளுக்கு விலை குறிக்கப்படுகின்றது என் றால், அதனை உண்டாக்குவதற்குச் செலவழிக்கப்பட்ட உழைப்பிற்குக் குறிக்கப்படும் விலையே அதுவாகும். உழைப்பின் விலையே பொருளின் விலை. உலகிற்கு விலை கொடுக்கப்படுகின்றது என்றால், பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக உழைப்பாளர் சமூகம் கொடுத்த உழைப்

பிற்குக் கொடுக்கப்படும் விலை அது என்பது பொருள். கடலினடியில் முத்துக்கிடக்கும் வரையில், அதற்கு விலை கிடையாது. ஒரு தொழிலாளி கடலுக்குள் சென்று அதனை எடுத்துக்கொண்டு வெளியேவந்து கொடுக்கும் போதுதான், அது விலைபோகிறது. கடலுக்குள் இருக்கும் வரையிலும் விலையில்லாத முத்து, வெளியே கொண்டு வந்த பிறகு விலைபெறுகிறது. ஆகவே, முத்துக்குக் கொடுக்கப்படும் விலை, அந்த முத்தினை எடுக்கச் செலவழித்த உழைப்பிற்குக் கொடுக்கப்படும் விலையாகும். அதே போல, காட்டின் நடுவில் மரம் வளர்ந்து நிற்கும் போது, காட்டி லிருப்போர் ஒரு சிறு காசுகூடக்கொடுத்து விலைக்கு வாங்க மாட்டார்கள் தொழிலாளி கல்லையும் முள்ளையும் கடந்து காட்டிறகுள் சென்று உழைப்பினைக் கொடுத்து, மரத்தை வெட்டிக்கொண்டு வந்து, மீண்டும் உழைப்பினைக் கொடுத்து, அதனை மேஜையாகச் செய்து முடித்துக்கொண்டு வந்து நிறுத்தும் போது, அது விலை போகிறது. காட்டில் விலை போகாத மரம் இப்பொழுது விலை போகிறது ஆகவே, மேஜைக்குக் கொடுக்கப்படும் விலை, அதனை ஆக்கு வதற்குச் செலவழித்த உழைப்புக்குக் கொடுக்கப்படும் விலை யாகும். எனவே தான், உலகம் உழைப்போர்க்குச் சொந் தம் என்று சொல்லப்படுகிறது.

இன்று, உழைப்போர்க்கு உலகம் சொந்தமில்லை. அந்த நிலையில்தான் சமுதாய, அரசியல், பொருளாதாரக் கட்டுத் திட்டங்கள், பழையகாலந் தொட்டு வகுக்கப்பட்டுக் கையா ளப்பட்டு வருகின்றன. அந்தக் கட்டுத்திட்டங்களை உடைத்

தெறிந்து, 'உலகம் உழைப்போர்க்குச் சொந்தமாகும்' என்ற நிலையை உண்டாக்குவதே, புதிய பாதையை உண்டாக்குவதாகும்.

உழைப்பு எல்லோருக்கும் சரிசமமான ரீதியில், பகுத்தறிவு ரீதியின் அடிப்படையில் அமைக்கப்படவேண்டும். பகுத்தறிவு ரீதிப்படி, ஐந்து திட்டங்கள், மக்களைப் பொருளாதார இன்ப வாழ்வு வாழும்படி செய்யும். அவையாவன:—

1. எல்லோருக்கும் பொதுச்சொத்துரிமை வழங்குவது.
2. பொது உழைப்பினைக்கொண்டு பொது உற்பத்தி.
3. உற்பத்தியைப் பொதுவாக வினியோகித்தல்.
4. பொது லாப உரிமை அடையச் செய்தல்.
5. உழைப்போர் ஆட்சி ஏற்படுத்துதல்.

இந்தத் திட்டங்கள் எப்பொழுது நடைமுறையில் கொண்டுவரப்படுகின்றனவோ, அப்பொழுதுதான் புது உலக வாழ்விற்கான புதியபாதை ஏற்பட்டதாக அமையும். அந்தப் புதிய பாதையை அமைக்கப், பொருளாதாரப் புரட்சி, மேற்கண்ட முறையில் ஏற்படவேண்டும். அப்புரட்சியை நடத்த, உலகெங்கும் வீரர்கள் தோன்ற வேண்டும்.

# 7. நமது குறிக்கோள்

'திராவிட நாடு திராவிடர்க்கே' என்ற உரிமை முழக்கம், திராவிடக் கழகத்தின் முதன்மையான குறிக்கோளாகக் கொள்ளப்பட்டுவருகின்றது. தமிழகத்தின் பல பாகங்களில், இனவெழுச்சி கொண்ட இளைஞர்களின் இதய கீதமாக, இம் முழக்கம் இன்று ஒலிக்கப் பெறுகின்றது.

தமிழ் வழங்கும் தமிழகம், தெலுங்கு வழங்கும் ஆந்திரம், கன்னடம் வழங்கும் கன்னடம், மலையாளம் வழங்கும் கேரளம் இவை நான்கும் சேர்ந்த நிலப்பகுதியைத் திராவிடம் என்று நாம் அழைக்கிறோம். நாம் மட்டும் அப்படி அழைக்க வில்லை; உலக வரலாற்றுப் பேராசிரியர்கள் பலரும், மொழிநூல் வல்லுநர் பலரும் அப்படித்தான் குறிப்பிடுகிறார்கள். வரலாறும் அறிஞர்களும் அப்படி அழைப்பதனால் தான், நாமும் திராவிடம் என்று அழைக்கிறோம்.

திராவிட நாடு திராவிடர்க்கே என்ற முழக்கத்தின் பொருளாக நாம் கொள்வது, தமிழகம், ஆந்திரம், கன்னடம், கேரளம் ஆகிய நான்கு பகுதிகளும், மொழி வழியே தனித்தனி ஆட்சிகளாகப் பிரிந்து, பொருளாதார வழியே ஒன்று சேர்ந்த திராவிடக் கூட்டாட்சியாக அமைவது என்பதாகும். தமிழகத்திலே தமிழராட்சியும், ஆந்திரத்திலே ஆந்திரராட்சியும், கன்னடத்திலே கன்னடராட்சியும், கேரளத்திலே கேரளராட்சியும் அமைந்து, அவை நான்கும் சேர்ந்த கூட்டாட்சியாக உடன் அமைவது,

பாதுகாப்பு, பொருளாதாரக் கூட்டுறவு, அரசியல் மேம்பாடு, வாழ்க்கை யுயர்வு ஆகிய துறைகளிலே சிறந்து விளங்குதற்கு ஏதுவாகும். இந்த நான்கு பகுதிகளும் மொழிவழியே பிரிந்து காணப்பட்டாலும், ஒன்றற் கொன்று தொடர்பு கொள்ளக்கூடிய ஒரு தன்மை வாய்ந் தனவே. மொழிகளுங்கூட ஒரு மொழியிலிருந்தே கிளைத் தெழுந்தனவாதலால், ஓர் இன மொழிகளாகும். ஆகவே தான், இந்நான்கு மொழிகளும் திராவிட இனத்தைச் சேர்ந்தனவாகும் என்று, மொழி நூல் வல்லுநர் கூறுகின் றனர். பண்பு, பழக்க வழக்கம், கோட்பாடு, நாகரிகம் ஆகிய வற்றில், ஒன்றிற் கொன்று ஒத்தே விளங்கக் காண்கிறோம். வட இந்தியப் பகுதியோடு ஒப்பிடுகொல், இவை நான்கும் வேறுபட்டு விளங்குவதைக் காணலாம். ஏன் இவற்றைக் கூறுகிறோமென்றால், திராவிடப்பகுதிகள் நான்கும் ஒன்று சேர்ந்து வாழக்கூடியன; வாழமுடியும்; வாழ்ந்தால் நல் லது. இவை நான்கும் தனித்தனியாகவோ ஒன்றுபட்டோ, வட இந்தியப்பகுதியோடு சேர்ந்து வாழமுடியாது; ஆகவே கூடாது; நல்லதுமல்ல.

திராவிடப் பகுதிகள் நான்கும், வட இந்தியாவைப் போலவே, இருநூறு ஆண்டுகளாக வெள்ளைக்காரருக்கு அடிமைப்பட்டிருந்தன. ஆகவே தான், வடநாடும் தென் னாடும் ஒன்று சேர்ந்து, வெள்ளை ஏகாதிபத்தியத்தை விரட்ட வேண்டிய இன்றியமையா நிலை ஏற்பட்டது; ஒன்று சேர்ந்து நின்றன. அதுபோலவே, பொருளாதாரத் துறையிலே, திராவிடத்தை வடநாடு அடிமைப் படுத்திச் சுரண்டி வரு

கிறது. அந்தச்சுரண்டலைத் தவிர்க்க, சுரண்டப்படும் நான்கு பகுதிகளும் ஒன்றுசேரவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இந்த அவசியத்தை உணர்ந்துதான், திராவிடப் பகுதிகள் நான்கையும் ஒன்று சேர்த்து ஐக்கிய முன்னணி ஏற்படுத்த, திராவிடக்கழகம் முனைந்துள்ளது.

உலகம், பல்வேறு நாடுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பிரிந்திருந்தால்தான் வாழமுடியும் என்று, அவை கருதுகின்றன. உலகம் ஒன்ருகவே இருக்கவேண்டும் என்று அவை யாவும் எண்ணிஞலும், ஒன்ருக இருக்க முடியவில்லை! இந்தியத் துணைக்கண்டம் போன்ற நிலப்பரப்புக் கொண்ட ரஷ்யா நீங்கின ஐரோப்பா, இன்று முப்பது நாடுகளுக்கு மேல் துண்டாக்கப்பட்டுத் தனித்தனி ஆட்சி கொண்டவையாக விளங்கக் காண்கிருேம். அவையெல்லாம் ஒன்ருக இருக்கக் கூடாதா? இருக்கக்கூடாது என்பதல்ல; ஒன்ருக இருக்கமுடியவில்லை! இந்தியத் துணைக்கண்டம் ஒன்ருக இருக்கக்கூடாதா? என்று கேட்கப்படுகிறது. ஒன்ருக இருக்கக்கூடாதென்பதல்ல; ஒன்ருக இருக்க முடியவில்லை. ஆகவே, பாகிஸ்தான் பகுதியில் வாழும் பெரும்பகுதி மக்கள், இந்தியாவோடு சேர்ந்து வாழமுடியவில்லை என்ற காரணத்தைக் காட்டித், தனிநாடு பெற்றனர். அதுபோலவே, திராவிடத்தைச் சேர்ந்த மக்கள் தனிநாடு பிரித்து வாழ வேண்டும் என்ற உணர்வு, திராவிடத்தைச் சேர்ந்த நான்கு பகுதி மக்களுக்கும் ஏற்படவேண்டும் என்று திராவிடர் கழகம் உணர்த்துவது, வடநாட்டோடு சேர்ந்து வாழக்கூடாது என்பதற்காக அல்ல; வாழமுடியவில்லை என்பதற்காகும்.

இந்தியத் துணைக்கண்டம், இன்று இந்தியா—பாகிஸ்தான் என்ற இருபிரிவோடுமட்டும் நிற்கவில்லை. ஐந்நூற்றறுபத்தைந்து சுதேச சமஸ்தானங்கள் இருக்கின்றன. அவைகளில், தனித்தனி அரசர்கள் இருக்கிறார்கள். அங்கெல்லாம் தனித்தனி ஆட்சி முறைகள். இந்திய யூனியனிலும் பாகிஸ்தான் ஆட்சியிலும் சமஸ்தானங்கள் அங்கம் வகித்தாலும், அவை தனித்து நிற்க விரும்பினாலும் தனித்திருக்கலாம் என்ற முறையில்தான், இன்றைய நிலை வகுக்கப்பட்டிருக்கின்றது. ஐதராபாத் சமஸ்தானம் தனித்தே நிற்க விரும்பி, ஒப்பந்தங்கள் வேண்டுமென்றால் செய்து கொள்ள எண்ணங் கொண்டிருக்கிறது. இந்த ஐந்நூற்றறுபத்தைந்து சுதேச சமஸ்தானங்களும், இந்தியத் துணைக்கண்டம் துண்டாடப்பட்ட நிலையை விளக்கவில்லையா? கோவா, டையூ, டாமன் போர்த்துகேசியரிடந்தானே இன்னமும் இருக்கின்றன! அவை துண்டாடப்பட்டு விளங்கவில்லையா? சந்திரநாகூர், பாண்டிச்சேரி காரைக்கால், ஏனும், மாகி ஆகிய இடங்கள், பிரெஞ்சு கவர்னர் பரோன், நேரு சர்க்காரிடம் செய்துள்ள பேச்சு முறைப்படி, வருங்காலத்திலும் அந்தப்பகுதிகள் பிரெஞ்சுக் கலையை வளர்க்க நட்புரிமையோடு தனித்து வாழும் என்பது, பிரிந்து நிற்கும் நிலையை விளக்காதா? 1937-ம் ஆண்டு வரையிலும் சேர்ந்திருந்த பர்மா பிரிந்துபோனது, துண்டாடப்பட்ட நிலையை உணர்த்தவில்லையா? நில இயல்பு பற்றி இந்தியாவோடு தொடர்புடைய இலங்கை, பிரிந்து தனித்து வாழ்வது, பிரிக்கப்பட்ட நிலையைக் காட்டவில்லையா? இத்தனை பிரிவுகளும் கலைக்கப்படவில்லை! கலைக்கப்

படும் அறிகுறிகளும் காணப்படவில்லை! எந்தக்காலத்திலோ, எதற்காகவோ பிரிந்த பிரிவினைகளெல்லாம், இன்றும் காப்பாற்றப்பட்டு வருகின்றன. தக்க காரணமில்லாமல் பிரிந்திருக்கும் பல பிரிவுகள் இந்தியத்துணைக் கண்டத்திலே இருக்க ஒப்புக்கொள்ளப்படும்போது, தக்க காரணங்காட்டிக் கேட்கும் திராவிடம் ஏன் பிரிந்திருக்கலாகாது?

இலக்கியத்தைக் காட்டி, வரலாற்றைக் கூறி, நிலைமையை விளக்கி, பண்பை உணர்த்தி, திராவிடம் தனியாக இயங்கக்கூடியது-இயங்கவேண்டும் என்று திராவிடக் கழகம் கூறுகிறது. சமஸ்தானங்கள், இன்று இல்லாவிட்டாலும் என்றாவது ஒழியவேண்டியவையாகும். மன்னர்கள் ஆட்சிமுறை ஒழிக்கப்பட்டு, மக்களாட்சி பூக்கவேண்டும். மக்களாட்சி பூக்கும்போது, சமஸ்தானங்களின் எல்லைக்கோடுகள் அழிக்கப்பட்டு, இனம்–மொழி–பண்பு–பழக்கவழக்கம கொள்கை-கோட்பாடு–நாகரிகம் ஆகியவற்றைக் கொண்டு பிரிக்கப்படும் நாட்டின் பகுதியோடு சேர்க்கப்படவேண்டும். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகள் வழங்கும் சமஸ்தானங்களும், சமஸ்தானப் பகுதிகளும், அந்தத்தன்மை அழிக்கப்பட்ட உருவில் அந்தந்த மொழிப் பகுதியோடு சேர்க்கப்பட வேண்டும். அதாவது தமிழகம், ஆந்திரம், கன்னடம், மலையாளம் என்ற நான்கு பகுதிகள் திராவிடக் கூட்டாட்சியில காணப்படவேண்டுமே யொழிய, திருவாங்கூர், கொச்சி, புதுக்கோட்டை, மைசூர், ஐதராபாத் போன்ற சமஸ்தானங்கள் அந்த உருவிலேயே நிலவக் கூடாது என்பதாகும். சமஸ்தானங்களின் எல்லைக்கோடுகள் அழிக்கப்படாமல் திராவிடம் தனியே பிரிந்தாலும்,

பிரிக்கப்பட்ட திராவிடக் கூட்டாட்சியில், சிலகாலம் வரையாவது மேற்குறித்த சமஸ்தானங்களை அங்கம் பெறும்படியாகச் செய்ய வேண்டும். (இப்போது இந்திய யூனியன் சர்க்காரிலும், பாகிஸ்தான் சர்க்காரிலும் சேர்ந்திருப்பது போல). நாளடைவில் மக்களின் மனம் பண்பட்டால், மன்னர்கள் வீழ்வர்! மகுடங்கள் சாயும்! சமஸ்தானங்கள் அழியும்! மொழிவழிப் பகுதிகள் அமையும்! பண்படும்படி செய்ய வேண்டிய பொறுப்பு, நம்முடையது.

தமிழகமும், ஆந்திரமும், கன்னடமும், கேரளமும் சேர்ந்திருப்பது நல்லது - சேர்ந்திருக்க முடியும். ஆகவே, திராவிடம் தனித்து வாழ்வது, இயல்வது ஆகும் என்று விளக்கினோம். இவை நான்கும் சேர்ந்து வாழுமா? என்று கேட்கத்தோன்றும். நான்கும் சேர்ந்துவாழ்ந்தால் பலனுண்டு என்பதை உணரும்படி செய்ய வேண்டுவது, நம்முடைய கடமை; அதாவது திராவிடக் கழகத்தின் தலையாய கடமை. அந்த முயற்சி தோற்றால், தமிழகம் வரையிலுமாவது தனிநாடுபெற்றுத்தீர வேண்டும் என்ற உறுதி கொள்ளவேண்டும். ஐக்கிய முன்னணி ஏற்படுத்தும் முயற்சியில், இன்று நாடு ஈடுபடவில்லை. ஐக்கிய முன்னணி ஏற்படுத்துவதற்கு முன்னர், இந்த நான்கு பகுதி மக்களிடத்தும், திராவிடக் கழகத்திட்டம் வைக்கப்படவேண்டும். திட்டத்தின் மீது பெரும் பாலான மக்களுக்கு அன்பும், மதிப்பும், போற்றுதலும் ஏற்படவேண்டும். அவை ஏற்பட்ட பிறகுதான், திட்டம் வெற்றிபெறும்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில், திராவிடநாடு திராவிடர்க்காக வேண்டும் என்ற உணர்வு, ஒரு சிலரிடத்தில்

தான் பரவி இருக்கிறது. தமிழகத்தின் பெரும் பகுதி மக்களின் ஆதரவை நாம் பெறவில்லை. பெறுவதற்கான முறையில், அரசியல் நுணுக்கந் தெரிந்த அறிஞர்கள் பலர் கழகத்தில் சேரவும், சேர்ந்து தங்கள் கருத்துக்களை வெளி யிட்டு ஒன்று சேர்ந்த முடிவு வெளிவரவும், ஓர் அரசியல் கழகம் எப்படிச் செயலாற்றிச் செல்ல வேண்டுமோ அப்படிச்சென்று ஒழுங்கு முறை ஏற்படுத்தவும், திராவிடப் பிரிவினை உணர்ச்சி கொண்டு தோழர்கள் முயன்றால்தான், திராவிடத்தின் மண்ணுக்குடைய உரிமையுள்ள மக்களின் ஆதரவைப் பெற்று, அவ்வாதரவைக் கொண்டு எண்ணிய திட்டத்தை நிறைவேற்ற முடியும்.

"இதனை இதனால் இவன் செய்யும்என்றாய்ந்து, அதனை அவன்கண் விடல்" என்று வள்ளுவர் கூறியபடி, செயல் முறை வேண்டும். யதேச்சாதிகாரம், எந்த இடத்திலும் எந்த முறையிலும் இல்லாமல் ஒழித்து, ஜனநாயக உணர்ச்சி கொண்ட மக்களை உருவாக்கும் வேலையில் ஈடுபடவேண்டும். கடமையைச் செய்ய முற்படும் நேரத்தில், பக்தி— தயை— தாக்ஷண்யம் முன்னிற்காமல், அறிவு- கட்டுப்பாடு- ஒழுக்கம் ஆகியவற்றைக் காட்டும் இளைஞர்கள் முன் வந்தால், தமிழக மக்களுக்குத் திட்டத்தை உணர்த்தி, அவர்களை உணரச் செய்து, அவர்களின் ஆதரவைப் பெற முடியும். அந்த அளவுக்கு வளர்ந்தால், ஆந்திர, கன்னட, மலையாள மக்க ளிடத்தில் ஆதரவை முறையோடு பெறலாகும்.

திராவிடக் கழகத்தில் சேர்ந்து, நல்ல அமைப்பு முறையின் கீழிருந்து தொண்டாற்ற வேண்டிய பலர், வெளியில் நடமாடுகிறார்கள். வேறு கட்சிகளிலிருக்கிறார்கள்.

அவர்களனைவரையும், திராவிடக் கழகப் பாசறைக்குள் கொண்டு வந்து சேர்க்க வேண்டிய பொறுப்பு நம்முடையது. அந்த அளவுக்குத் திராவிடக் கழகத்தின் அமைப்பு முறையை நல்ல நெறியில் வளர்த்து, அவர்களனைவரின் உள்ளத்தை ஈர்க்கும் தன்மையில் செயலாற்ற வேண்டியது பகுத்தறிவுணர்ச்சி கொண்ட விடுதலை வேட்கையுடையோரின் நீங்காக் கடமையாகும்.

திராவிடப் பகுதிகள் நான்கும் ஒரு கூட்டாட்சியில் அமைந்தால், எல்லா வகையிலும் வளமுள்ளதாகும். முப்புறம் கடல்கள், மற்றோர் புறம் குன்றுகள் எல்லைகளாகக் காட்சியளிக்கின்றன! ஆயிரத்தைந்நூறு மைல்களுக்கு மேற்பட்ட கடற்கரை! எதிரே மாபெரும் இந்து மாக்கடல்! கடலைக் கிழித்தேகும் கப்பல்கள்! அவை தங்கப், பல துறை முகங்கள்! முத்தும், பவளமும் கொடுக்கும் கடல்கள்! கப்பற்கட்டுவதற்குரிய மரங்கள் விளையும் காடுகள்! அக் காட்டகத்தே வளரும் அகில்! அகிலினை ஒட்டித் தேக்கு! தேக்கினை அடுத்துச் சந்தனம்! வளப்பமுள்ள மலைகள்! மலைச்சரிவுகளிலே யானைகள்! பொன் விளையும் கோலார் தங்க வயல்! இரும்பு எடுக்கும் சுரங்கங்கள்! நிலக்கரி அகப்படும் நிலங்கள்! கண்ணாடிக்கற்கள் கிடைக்கும் இடங்கள்! கண்ணாடி காய்ச்சுவதற்கான மணல் வெளிகள்! சிமிட்டி செய்யும் மண் நிறைந்த வெளிகள்! அணுக்குண்டு செய்வதற்கான யூரேனியம் வெட்டி எடுக்கப்படும் கனிகள்! பருத்தி விளையும் காடுகள்! நெல்லும் கரும்பும் விளையுங் கழனிகள்! விளைவைப் பெருக்கும் வயல்கள்! வற்றாத ஆறுகள்! வளமுள்ள சோலைகள்! இவையனைத்தையும் நுகர்வதற்கான ஆறு கோடி மக்கள்! பின் ஏன் திராவிடம் தனித்து வாழலாகாது? வாழலாம் வகையுணர்ந்தால்! உணர்த்தப்பட்டால்!

3651

திராவிடத்தின் பொருள்வளம், வடநாட்டு மார்வாடி, குஜராத்தி, பனியா, மூல்தானிகளால் கொள்ளையிடப்படுகின்றது! பிர்லாக்களும், டாட்டாக்களும், டால்மியாக்களும், கலீலீக்களும், ஷெராவ் அலிக்களும், திராவிடத்தை 'மார்க்கெட்டாகப்' பயன்படுத்துகின்றனர். வெள்ளை முதலாளிகள் இது வரையில் சுரண்டி வந்தது சிறிதளவு நின்றது என்றாலும், வட இந்திய முதலாளிகளோடு கூட்டு ஒப்பந்தம் செய்துகொண்டு, இரு வகை முதலாளிகளும் சேர்ந்து கொள்ளையடிக்கிறார்கள். இந்த நிலை தடுக்கப்படத்தான், திராவிடம் பிரியவேண்டும் என்றுணர்த்துகிறோம்.

திராவிடத்தில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து அழியும் மக்களனைவரும், இம்மண்ணுக்குடையவர் என்ற ஒரே நிலைக்குட்பட்டுத், திரு இடத்தைச் சேர்ந்த திராவிடர் என்ற இன உணர்ச்சியில் ஒன்றி வாழ வேண்டும். இந்த உணர்வு பார்ப்பனர் உட்பட எல்லோர்க்கும் ஏற்படவேண்டும் என்பதற்காகத்தான், திராவிடக் கழகம் வேலைசெய்து வருகிறது.

சமத்துவ சமதர்மக் குடியரசு ஆட்சியைத் திராவிடத்தில்—தவறினால் தமிழகத்தில் ஏற்படுத்தவே, சமுதாயம், பொருளாதாரம், அரசியல் ஆகிய துறைகளில் திராவிடக் கழகம் பாடுபடுகிறது என்றறிந்து, இளைஞர்கள் பலர் அதில் சேர்ந்துள்ளார்கள். நீதி, நேர்மை, பகுத்தறிவு ஆகியவைகளுக்குக்கட்டுப்பட்டுச் செயலாற்றும் நெறியிலே, தூய்மையான உள்ளத்தோடு சென்று பணியாற்றுவோமாக! வஞ்சம், சூழ்ச்சி, பொறாமை, பித்தலாட்டம் ஆகியவற்றைத் தொகையாக எதிர் நிறுத்திக் தூள்தூளாக்கும் காழ்ப்புள்ளம் பெற்றால், நமது குறிக்கோள் வெற்றி பெறும்!

3651